திராவிடநாடு


ஸ்பெயின்
மொராக்கோ
அல்ஜீரியா
டுனீஷியா
மொராக்கோ
ஸ்பெயின்
மேற்கு ஆபிரிகா
லிபியா.
எகிப்து.
பிரெஞ்சு
மேற்கு
ஆபிரிகா
காம்பியா
போர்ட்டுகினியா
சைபிரா லெயோன்
லைபிரியா
சூடான்.
ஃபிரெஞ்சு ஆபிரிகா.
சோமலிலாந்து
எதியோபியா
பெல்ஜியன்
காங்கோ
உகாந்தா
கென்யா
சோமாலிலாந்து
தங்கநிகா
அங்கோலா
மத்திய
ஆபிரிக
பெட
ரேஷன்
மொசாம்பிக்
மடகாஸ்கர்
தென்
மேற்கு
ஆபிரிகா
பெஞ்சுஆ
லாண்ட்
தென் ஆபிரிகா
யூனியன்
6½ கோடி
அரேபியரும்
இதரரும்.
14 கோடி
நீக்ரோக்கள்.
50 லட்சம்
வெள்ளையர்.

செய்திகள்

பனகல் மாளிகையில்

மாவட்ட ஆட்சி மன்றங்கள் (ஜில்லா போர்டுகள்) தத்தமது மாவட்டத்தில் பஸ்சர்வீஸ் நடத்தி, வருமானம் பெற்று, மாவட்ட நலனுக்குச் செலவிட வழி காணவேண்டும் என்று, மாவட்ட ஆட்சி மன்றக் கழகத்தின் செயற்குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. தனிப்பட்ட முதலாளிகளிடம் இந்தத் தொழிலை விடாமல், மாவட்ட ஆட்சிமன்றத்தின் உரிமைத்தொழிலாக்கிவிட்டால், நல்ல வருவாய் கிடைக்குமென்று தீர்மானம் எடுத்துக் காட்டுகிறது. மோடார் போக்குவரத்துத்தொழிலை, மாவட்ட ஆட்சி மன்றத்துக்கே உரிமையுடையதாக்குவதற்குச் சர்க்கார் சம்மதமளிக்க விரும்பாவிடில், தனிப்பட்ட முதலாளிகள் பாதிப் பணமும், மாவட்ட ஆட்சி மன்றம் பாதிப் பணமும் முதல் போட்டு, தொழிலை நடத்தவாவது உரிமை அளிக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது.

இந்தமுக்கியமான தீர்மானம்செங்கற்பட்டுமாவட்ட ஆட்சிமன்ற அலுவலகம்அமைந்துள்ளபனகல் மாளிகையில் கூடிய செயற்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

'மெயில்' பத்திரிகை, இப்போதே பாய்ந்து, தீர்மானத்தைப் பிய்த்தெறிய முன்வந்துவிட்டது! முதலாளிகள்தான் நடத்த வேண்டுமாம்!

★

அவர் 'கைங்கரியம்'

கடந்த பொதுத் தேர்தலில், பொது மக்களால் தோற்கடிக்கப்பட்ட சந்தானம், நேரு பண்டிதரின் தயவால் குட்டி கவர்னர் வேலை பெற்று, ஜனநாயகத்தைக் குட்டிக் குனியவைத்தார்! பிறகு, நிதிக் கமிஷன் தலைவராகப் பதவி பெற்று, மக்களின் குரலுக்கு எங்கள் ஆட்சியில் மதிப்பளிக்கமாட்டோம் என்று கூறுவதுபோல, கொலுவீருக்கிறார். இவ்வளவுக்குப் பிறகும் அவருக்குப் பொதுமக்கள்மீது கிளம்பிய கோபம் அடங்கியதாகத் தெரியவில்லை. இப்போது உள்ள புதிய பதவியைக் கருவியாகக்கொண்டு பொது மக்களை வாட்டி வதைக்கத் திட்டமிட்டு விட்டார்போல் தெரிகிறது!

புதிய வரிகள் போட்டாக வேண்டும், புதிய வரிகள் மூலம் ஏராளமாக பணம் பெற்றாக வேண்டும், சர்க்காருக்குச் செலவு அதிகமாக இருக்கிறது என்று திருவாய் மலர்ந்தருளிவிட்டு, இந்தத் தமது யோசனையைத் திணிக்க ஒவ்வொரு இராஜ்ய சர்க்காரிடமும் பேசி வருகிறார்.

மற்ற நாடுகளிலே விதிக்கப்பட்டுள்ளதைவிட இங்கு வரி குறைவாம்! எனவே முணுமுணுக்காமல் மக்கள் அதிகமாக புதிய வரிகளைச் செலுத்த வேண்டுமாம். பத்திரிகைகள் இந்த போதனையைத் தர வேண்டுமாம். அவர் கைங்கரியம் இப்படி ஆரம்பமாகி விட்டிருக்கிறது.

★

அந்தக் கடவுள் படும்பாடு!

திபேத் நாட்டு மக்களுக்கு மத குருவாக இருப்பவர் தலாய்லாமா என்பவர். "கண்டெடுத்த கடவுள்" எனத் தலாய்லாமாவுக்கு திபேத் மக்கள் அடங்கியுள்ளார்கள். மற்றொரு லாமா—பன்சன்லாமா என்பவர் அரசியல் தலைவராக அங்கு இருக்கிறார். தலாய்லாமா, பன்சன் லாமா இருவர்களின் ஆதிக்கத்தில் திபேத் நாடு உள்ளது எனலாம். 'கண்டெடுத்த கடவுள்' எனப் போற்றப்படும் இந்த இரு லாமாக்கள், வரும் சில ஆண்டுகளுக்கு வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்யமாட்டார்கள் எனத் தெரிகிறது. காரணம், இந்த இரு லாமாக்களைக் கொன்றுவிட வெறி பிடித்த சிலரும், எதிரிகளான சில லாமாக்களும் சதி செய்துகொண்டிருக்கிறார்களாம். நாட்டைவிட்டு வெளியேறினால் எதிரிகளால் ஆபத்து நேரக்கூடும் என்று அஞ்சி, இரு லாமாக்களும் திபேத்தைவிட்டு வெளியே போவதில்லையெனத் தீர்மானித்துள்ளனர். "கண்டெடுத்த கடவுள்களாக" இருந்தாலும் கத்தியென்றால் பயம்தான்!

★

நிபுணர்கள்!—பட்டாளம்!!

கைத்தறித் துணிக்கு மார்க்கட் கிடைப்பதற்கான ஆலோசனையை இந்திய சர்க்காருக்குக்கூற அமெரிக்க நிபுணர்களும்,

அணை, தேக்கம் ஆகியவைகளைப் பார்வையிட்டு அபிப்பிராயம் கூற இந்திய சர்க்காரின் அழைப்பின் பேரில் ஆறு பிரிட்டிஷ் நிபுணர்களும்,

பொருளாதாரத் திட்டம் பற்றி ஆய்ந்தறிந்து கருத்துரை வழங்க பிரபல பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் சர். ராபர்ட்ஹால் என்பாரும்,

மரச்சாமான் தொழில்பற்றிக் கூறிட ஜப்பான் நிபுணர்களும் யந்திரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான ஆலோசனை கூறுவதற்காக இந்திய சர்க்காரால் வரவழைக்கப்பட்டிருக்கும் கோடீஸ் என்பவருடன் வந்துள்ள பிரிட்டிஷ் பொறி இயல் நிபுணர்களும்,

காகித ஆலைகள் சம்பந்தமான யோசனைகூற ஜெர்மனியிலிருந்தும் இத்தாலியிலிருந்தும் வந்துள்ள நிபுணர்களும்,

கனரகத் தொழிற்சாலை சம்பந்தமாக அபிப்பிராயம் அளிக்க ரஷிய நிபுணர்களும்,

பார்லிமெண்டரி முறைபற்றி அறிந்துள்ள மேற்கு ஜெர்மனி நிபுணர்களும்,

ராணுவத்துறையில்அனுபவமிக்க சீன நாட்டு நிபுணர்களும்,

யுகோஸ்லேவியாவிலிருந்து ராணுவத் துறை நிபுணர்களும்,

விவசாயத்துறைபற்றி ஆய்வுரை தர, சீன நிபுணர்களும், மற்றும் ஒவ்வோர் துறை பற்றியும் வெளி நாட்டு நிபுணர்கள் பட்டாளம் இங்கு வந்தவண்ணம் இருக்கிறது.

இங்கிருந்து, மற்ற நாடுகளுக்கு அனுப்பப்படும் நிபுணர்கள், எந்தத் துறையிலும் இல்லை!!

★

ஏனிந்த விலங்கு

மலர் 15] ஆண்டுச் சந்தா ரூ. 7 [25–11–56] தனிப் பிரதி 2 அணா [இதழ் 21

"ஐ. நா. சபை என்று ஒன்றிருக்கும்போது, எதற்காக இன்னொரு தனி அமைப்பு?", என்று கடந்த கிழமை சென்னையில் நடைபெற்ற காமன் வெல்த் எதிர்ப்பு சர்வகட்சிக் கூட்டத்தில் கேட்டிருக்கிறார்கள்.

இப்படியேன் இந்தியா ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்?—என்கிற கேள்வியை அன்று முதல் நாம் கேட்டுவருகிறோம். இந்தியாவைப்போலவே சுதந்திரம் பெற்ற நாடுதான் பர்மாவும்! அது, இந்த அமைப்பில், இல்லாததால் எந்தக் காரியமும் அதற்கு நடவாமல் இல்லை.

இப்படி ஒரு அமைப்பில் ஈடுபட்டிருப்பதால் ஏதாவது நன்மையுண்டாவெனிலோ, எதுவும் கிடையாது—பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு நாங்களும் தலை வணங்குகிறோம் என்று சொல்வது தவிர! இந்தியா இடம்பெற்றிருக்கும் இதே காமன்வெல்த் அமைப்பில் தான், நிறவெறிக் கொடுங்கோலன் ஸ்டைர்டம்மின் தென் ஆபிரிக யூனியனும் இருக்கிறது–நேருவுடனும் அவன் கைகுலுக்குகிறான்! நீதிபெற முடிந்ததா! வெறி பிடித்து அலையும் தென் ஆபிரிகாவை, ஏன் இப்படி மனித நீதியைப் புறக்கணிக்கிறாய் என்றாவது, கேட்டதுண்டா பிரிட்டன்! இலங்கை இன்னொரு நாடு. இதற்கும், இந்தியாவுக்கு மிடையிலுள்ள தகராறு தீர்ந்தபாடில்லை. ஏதாவது சிரத்தையெடுத்துக் கொண்டதுண்டோ, பிரிட்டன்? கிடையாது.

ஆச்சாரியார்கூட, எகிப்தில், ஈடன், படைகள் அனுப்பியதும், கண்டிக்குமுகத்தான் நாம் இந்த அமைப்பிலிருந்து விலகிவிடவேண்டும் என்றார். ஒரு அக்கிரமத்தைக்கண்டிக்க விலகிக்காட்டிய பேராவது வந்திருக்கும். நேரு சர்க்காரோ, இன்னும், பிரிட்டனுக்கு வக்காலத்து வாங்குகிறது!

இந்த இலட்சணத்தில் இங்குள்ள சிலர், நம்மையெல்லாம் பார்த்து, வெள்ளைத்தாசர்கள் என்று கூறிக் குதூகலிக்க எண்ணுகின்றனர். வெள்ளை நேசம் போய்விடுமோ என்று அஞ்சுகிற நிலையில் நாமில்லை! ஆனால் யார் வெள்ளைக்காரர்களை விரட்டி விட்டதாக 'தமுக்கு' போடுகிறார்களோ, அவர்களது தலைவர்கள்தான், பிரிட்டனின் நேசத்தையும் தாசனாயிருக்கும் தன்மையையும் இழக்க மறுக்கின்றனர்.

நம்மைப் பார்த்து ஏதேதோ நவிலும் நண்பர்கள், முதலில் தங்கள் தலைவராம் நேருவை, பிரிட்டனின் சாம்ராஜ்யத் தொடர்பிலிருந்து கத்தரித்துக்கொண்டு வரச்சொன்னால் நன்றாயிருக்கும். செய்வார்களா!

உலகத்தின் பிரச்சினைகளையெல்லாம் கவனிக்க அகில உலக நாடுகளின் சபை ஒன்று இருக்கும்போது, ஆங்காங்கே தனித்தனிக் கூட்டுகள் அமைத்துக் கொண்டதால்தான், இன்று உலக அமைதிக்கே பங்கம் வந்திருக்கிறது. இதனை நேருவே, கூறுகிறார். எனினும், காமன்வெல்த் அமைப்பிலிருந்து விலக மறுக்கிறார்!

உண்மையில் உலக நாடுகள் சபைக்கு மதிப்பும், பெற்ற சுதந்திரத்துக்குப் பெருமையும் உண்டாக்க விரும்பினால், டில்லி அரசு, இந்த அமைப்பிலிருந்து துண்டித்துக்கொள்வதே நற்செய்கையாகும். அதனைத்தான் மாற்றுக் கட்சியினரும் காங்கிரசிலுள்ள சிலரும் வலியுறுத்துகின்றனர். ★

வருந்தத்தக்கது

அரும்பை மலராக்கிவிடலாம்! ஆனால் முள்ளை அவ்விதம் செய்யமுடியாதல்லவா? அந்த முள்ளின் சுபாவமே பெற்றிருக்கிறது, அமெரிக்கா, செஞ்சீனாவின் விஷயத்தில்.

புதியதோர் நாடு என்று கருதப்படக்கூடிய விதத்தில் சீனம் உருப்பெற்றுவருவதோடு மாசேதுங் தலைமையில் நிலையான அரசாங்கமும் நடைபெற்று வருகிறது. இருந்தும், சீனத்தை ஒரு நாடு என்று ஏற்க, இன்னும் அமெரிக்கா மறுக்கிறது! இந்தத் தடவை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூடியபோது, இது பற்றி இந்தியாவின் சார்பில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அமெரிக்காவாலும் அதன் நட்புறவு பெற்றவைகளாலும் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

சூயஸ் நெருக்கடி, 'சூடு' ஏறாமல் தடுத்தபெருமை ஐ. நா. வுக்கே உண்டு என்று உலகம் ஆனந்தம் அடைகிற இச்சமயத்தில், வரும் இத்தகவல், துயரத்தையே தரும் சமாதான விரும்பிகளுக்கு.

சீனா இருக்கவேண்டிய இடத்தில் சியாங்கேஷேக்கின் பிரதிநிதி இருக்கிறார்! அவர் கூறினாராம் ஐ. நா. சபையில், "கம்யூனிஸ்டுகள் எமது சீனாவுக்குள் புகுந்து ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அக்கிரமத்தைக் கண்டிக்கவேண்டும்," என்பதாக. எப்படி வாதம்? தத்தளிக்கும் சியாங்கேஷேக் சண்டப்பிரசண்டம் செய்கிறார்.

உலகப் பொதுச் சபைக்கு, எப்போதையும்விட இப்போது கௌரவமும் பொறுப்பும் அதிகமாகியிருக்கிறது. இதனைக் கட்டிக்காப்பதில் ஒவ்வொரு நாடும் ஈடுபட்டால்தான், உலக சபையால் ஒழுங்கான காரியங்களைச் செய்யமுடியும். அந்த ஒத்துழைப்பை யாவது அமெரிக்கா போன்றவைகள் தரக்கூடாதா! ★

தமிழ் நாட்டில்......

'தமிழ் நாடு'—என்ற உரிமைப் பெயர்கூடப் பெருமல் தமிழர்கள்சென்னை இராஜ்யம் என்ற எழுச்சியற்ற பெயரைச் சுமந்துகொண்டிருக்கும் வேளை.

'தமிழ்நாடு' என்ற பெயரிட்டு தமிழர்களின் இதயத்துக்கு இன்பமளிக்க வேண்டுமென்று முறையிட்டு முறையிட்டு, துரைத்தனத்தார் செவி சாய்த்திட மறுத்தது கண்டு மனம் உடைந்து, மாபெரும் தியாகி சங்கரலிங்கனுர் உண்ணுவிரதமிருந்து உயிர் துறந்தது கண்டு ஆருத் துயரம் கொண்டுள்ள நேரம்.

சங்கரலிங்கனுர் ஏன் உர்யித் தியாகம் செய்தார் என்று உருக்கத்துடன் மக்கள்கேட்டபோது, பட்டினி கிடந்தார், செத்தார்! என்று அலட்சியமாகப் பதிலளிக்கும் பண்புள்ளவரின் பரிபாலனத்தைச் சுமந்து கொண்டிருக்கும் சமயம்.

இரப்பர் தேயிலையும், காப்பியும் களிறும், மலைபடு பொருளும் கொண்ட தேவிகுளம் பீர்மேடு பகுதிகள் தமிழருக்கே உரியது என்பது உலகறிந்த உண்மையாக இருந்தும், டில்லியின் எதேச்சாதிகாரத்தால் இழந்து, அந்தப் பகுதிகள் கேரளத்துடன் இணைக்கப்பட்டு, தமிழர் நெஞ்சம் கொதித்திருக்கும் காலம்.

தட்சிணப் பிரதேசம் என்ற திட்டத்தின் மூலம், தமிழகத்தையும் மலையாளத்தையும் ஒன்று ஆக்கி, அதன் மூலம் தமிழரின் செல்வாக்கைச் சிதைக்கலாம் என்று சாணக்கியர்கள் சூழ்ச்சி செய்கிருர்கள் என்ற அச்சம் மக்கள் மனதில் புகுந்துவிட்ட சமயம்.

மலையாளிகள் எல்லாத் துறையிலும் நுழைந்து ஆதிக்கம் செலுத்துகிருர்கள், தமிழ் நாட்டிலும் தமிழனுக்கு உரிய உரிமைகள், பதவிகள், பறிபோகின்றன என்று சந்தேகமும் சஞ்சலமும் மிகுந்திருக்கும் வேளை.

இப்படிப்பட்ட சமயத்தில், வெந்த புண்ணில் வேல் என்பது போல, உரிமை இழந்து, உள்ளம் குமுறி, கொதித்துக்கிடக்கும் தமிழர்களை மேலும் மேலும் தாக்குவது என்று துணிந்து திட்டமிட்டு டில்லி வேலை செய்கிறது என்று எண்ணத்தக்க விதத்தில்,

ஜான் எனும் மலையாளப் பிரமுகரைக் கவர்னராக நியமித்துவிட்டது.

ஜான் நேற்று வரையில் மலையாளி—தமிழர் மனத் தாங்கலுக்குக் காரணமான எல்லாப் பிரச்சினைகளிலும் மிக நெருங்கிய தொடர்புகொண்டிருந்தவர்.

ஜான், தேவிகுளம் பீர்மேடு பகுதிகள், தமிழர் பெருவாரியாக அங்கு இருப்பினும், கேரளத்துக்குத் தான் சேரவேண்டும் என்று மட்டுமல்ல, நாஞ்சில் நாடு கூட, தமிழ் நாட்டுக்குத் தரக்கூடாது என்று வாதாடிய கோஷ்டியில் சேர்ந்திருந்த தர்மவான்!

நாஞ்சில் தமிழர்கள் தமது உரிமைக்காகக் கிளர்ச்சி செய்தபோது, பட்டம் சர்க்கார் ஈவு இரக்கமற்று தமிழரைச் சுட்டுத் தள்ளியபோது, சரியான வேலை! சபாஷ்! என்று கூறி, ஆதரவு அளித்த' புண்யவான்!

எதிர்க் கட்சிகளின் கூட்டு ஏற்பட்டால், கேரளத்தில் காங்கிரஸ் மெஜாரிடி நிலையில் இல்லை என்பதைத் தெரிந்த பிறகும், காங்கிரஸ் மந்திரிசபை அமைத்து அரசாண்ட கண்ணியவான்!

கேரளத்தில் தன் தலைமையை நிலைநாட்டிக் கொள்ள முடியாதவரும், தன் கட்சியான காங்கிரஸ் கட்சியை மெஜாரடி யாக்கிடும் அளவு செல்வாக்கு பெறமுடியாமல், கேரளத்து மக்களின் நம்பிக்கையை இழந்தவருமான இந்த ஜான் அவர்களைத் தமிழ்நாட்டு கவர்னராக தமிழர்கள் மனம் நொந்துகிடக்கும் நேரத்தில் நியமித்தது ஏன்?

தமிழர்கள் குட்டக் குட்டக் குனிபவர்கள் என்பதனுலா?

பச்சைத் தமிழர் ஆட்சியில் எத்தனை கேடுகள் நடந்தாலும் எதிர்ப்பு கிளம்பாது என்ற அசட்டுத் தைரியத்தினுலா?

மராட்டியர்—குஜராத்தி மனமாச்சரியம் ஏற்பட்டது போல, தமிழர் — மலையாளிகளுக்குள் மனக் கசப்பு ஏற்படட்டும் என்ற சூது மதியினுலா?

ஜான் நியமனத்துக்கு என்ன அவசியம் வந்தது?

பெரியாருக்கு உற்ற நண்பராமே காமராஜர்!

தட்சிணப் பிரதேசத்தைத் தயவு தாட்சணியமின்றி எதிர்ப்பவராமே!

ஜான் கவர்னராவதைக் காமராஜர் ஏற்றுக் கொண்டாரே!

பெரியார் என்ன சொல்கிருர்!

மலையாளிகளைத் தமிழ்நாட்டைவிட்டே ஓட்ட வேண்டும் என்று பேசிவருகிருர்

பெரியார்.

மலையாளி—தமிழர் மனமாச்சரியம் இருந்து வருவது தெரிந்தும்மலையாளத்து ஜான் அவர்களைக்கவர்னர் ஆக நியமனம் செய்வதற்கு சம்மதம் அளித்திருக்கிருர்

காமராஜர்.

பெரியார்—காமராஜர் கூட்டுறவு என்கிருர்களே! அதன் இலட்சணம் இதுதானு?

ஜான் தமிழ்நாட்டுக் கவர்னர் ஆக்கப்பட்டது,

புதிய தலைவலி.

தமிழ்நாடு எத்தனை எத்தனை வலிகளைத் தாங்க வேண்டுமோ, யார் கண்டார்கள்?

★

புத்தம்-அங்கெல்லாம்!

—[★]—

இலங்கை:

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் கங்கைச் சமவெளியில் வாழ்ந்து வந்த இந்துக்கள் இலங்கை சென்று குடியேறினார்கள். இதற்கு இருநூறு ஆண்டுகளுக்குப் பின் அசோகர் தம் மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும் மற்றும் பல பௌத்த பிக்குகளையும் அனுப்பி இலங்கை வாழ் இந்துக்களிடையே பௌத்த மதம பரவச் செய்தார். சங்கமித்திரை போதி மரத்தின் கிளையொன்றை இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்று, அப்போது இலங்கையின் தலைநகராக இருந்த அனுராதபுரத்தில் நட்டு வைத்தார். அம்மரம் சுமார் 2200 ஆண்டுகளாக இன்னும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்போது இலங்கையை டிஸ்ஸா என்ற அரசர் ஆண்டு வந்தார். மகேந்திரனது முயற்சியால் அரசர் டிஸ்ஸா அனுராதபுரத்திற்கருகில் ஒரு மடத்தைக் கட்டுவித்தார். மேலும் கௌதம புத்தரின் புனிதத் தோள் எலும்புகளைப் பாதுகாத்துப் போற்றி வழிபடுவதற்காகத் தூபராம தகோபா என்ற பௌத்தக் கோவிலையும் அனுராதபுரத்தில் கட்டினார். கி. பி. முதலாம் நூற்றாண்டில் நினைவு வழி வந்த பௌத்த தர்மம் முதன் முதலாகச் சிங்கள மொழியில் எழுதப்பட்டது. இம் முதல் நூலைச் சிங்களவர்கள் பெரிதும் போற்றிப் பாராட்டுகிறார்கள். கி. பி. மூன்றும் நூற்றாண்டில் கௌதம புத்தரின் புனிதப்பல்லைப் பெற்று இலங்கை மேலும்பெருமையுற்றது. இப் புனிதப் பல் கண்டியில் உள்ள பௌத்த கோவிலில் இன்றும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இக்கோவில் ஆசியாவில் வாழும் 15 கோடி பௌத்தர்களுக்குப் புனித 'மெக்கா'வாக இன்னும் திகழ்கிறது.

கி. பி. பதினொன்றும் நூற்றாண்டில் தஞ்சாவூரில் அரசோச்சிய சோழ மன்னர்கள் இலங்கைமீது படையெடுத்து வெற்றி கண்டார்கள். இப் படையெடுப்புகளின் விளைவாக இலங்கையில் பௌத்த சங்கங்கள் பாழடைந்து பௌத்த பிக்குகளின் எண்ணிக்கையும் குறைந்து போயிற்று. இக்குறையைப் போக்க பர்மாவிலிருந்து பௌத்த பிக்குகள் இலங்கைக்கு வந்தார்களென அறிகிறோம். கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பின் பௌத்த மதம் மறுபடியும் புத்துயிர் பெற்று வளர்ந்தது.

இன்றைய இலங்கையில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் இருந்த போதிலும் பெரும்பகுதி மக்கள் பௌத்த மதத்தினராவர். அயல் ஆட்சியினின்றும் விடுதலை பெற்ற அவர்களது அரசாங்கம் பௌத்த மத நினைவுச் சின்னங்களைப் புதுப்பிக்கவும் நிறையத் திட்டங்கள் வகுத்திருக்கிறது. இலங்கையில் உள்ள பௌத்த சங்கமும் செழிப்பு மிக்கதாய்ச் சீரிய முறையில் செயலாற்றி வருகிறது. இலங்கையிலன்றி ஏனைய நாடுகளிலும் பௌத்த மதத்தைப் பரப்புவதற்குப் பண உதவி அளிப்பதுடன் பிக்குகளையும் அனுப்பிப் பிரசாரத்தில் ஈடுபடச்செய்கிறது. இலங்கை வாழ் பௌத்த பிக்குகள் 'சுத்த பிடகம்' எனப்படும் புத்தரின் போதனைகளைச் சிறக்கக் கற்றுத் தெளிந்த உள்ளமுடையவர்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் போது இனி வருங்காலத்தில் பௌத்த உலகிற்கே வழிகாட்டியாய் இலங்கை விளங்குமென்றால் அது மிகையன்று.

பர்மா:

சுவர்ண பூமி என்று அழைக்கப்பட்ட பர்மாவில் அசோகரது காலத்தில் பௌத்த மதம் பரவியது. கி. பி. 1000 ஆண்டுகள்வரை பர்மியர்கள் ஹீனயான பௌத்த மதத்தையும் மஹாயான பௌத்த மதத்தையும், நாட் எனப்படும் துஷ்ட தேவதைகளை வழிபடுதலையும் மேற்கொண்டார்கள். கி. பி. 1044 முதல் கி. பி. 1077 வரை பர்மாவை அரசாண்ட அனவ்ரஹ்தா என்ற பர்மிய அரசர், தேரவாடா எனப்படும் ஒரு வகை ஹீனயான பௌத்த மதத்தைத் தழுவினார். அதுமுதல் பௌத்த மதம் பர்மாவின் அரசாங்க மதமாக மாறியது. அனவ்ரஹ்தா தன் தலைநகரான பேகனில் பகோடா என்று அழைக்கப்படும் பௌத்த கோவில்களைப் பல்லாயிரக் கணக்கில் கட்டுவித்தான். இதற்குச் சுமார் நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஷுடகன் என்ற அழகிய பௌத்தகோயில் ரங்கூனில் எழுந்தது. இக்கோவிலின் மையக் கோபுரத்திற்குப் பொன் தகடு போர்த்தி இருப்பதால் இக்கோவிலைப் பொற்கோவில் என்றும் அழைப்பர். இக்கோவிலில் புத்தரின் புனிதத் தலைமயிர் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஷுடகன் பகோடா, பௌத்த உலகின் புனித யாத்திரைத்தலமாக இன்றும் விளங்குகிறது. கி. பி. 13-ம் நூற்றாண்டில் மங்கோலிய மன்னன் குப்லி கானின் படையெடுப்பால் பர்மிய தலைநகரமான பேகன் சிதைவுற்று அழிந்தது. இதற்குப் பின் 16-ம் நூற்றாண்டில்தான் பர்மா ஒரு

புத்தமத கேந்திரமான 'சாஞ்சி'யில் நவம்பர் திங்கள் **30**ம் நாள் புத்த ஜயந்தி விழா சிறப்பாக நடைபெற இருக்கிறது.

'காட்மாண்டி'ல் (திபேத்) இந்த விழா சென்ற சில நாட்களாக நடைபெற்று வருகிறது.

பிறந்த இடத்தைவிட புகுந்த இடங்களில்தான் புத்தம் இயங்கி வருகிறது.

ஆசியாவில் எங்கெங்கு எப்படி எப்படி புத்தமதம் இருக்கிறது என்பதைக் காண்க.

பௌத்த நாடாக ஒன்றுபட்டது. பின்னர் ஆங்கிலேயரின் ஆட்சிக்குப் பர்மா அடிமையான போதிலும், இவ் வாட்சி மாறுதலால் பௌத்த மதம் எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை.

பர்மாவில் இன்று வழக்கிலிருக்கும் பௌத்த மதம் ஏனைய நாடுகளிலிருக்கும் பௌத்த மதத்தை விடத் தூய்மையானது. பர்மிய பௌத்தபிக்குகள் புத்தரின் இலட்சிய வாழ்வை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அபிதம்மா எனப்படும் தியான முறைகளில் வல்லவர்களாய்த் திகழ்கிறார்கள். பர்மிய மக்களும் தங்கள் நாட்டைப் பொதுவுடைமை அபாயத்தினின்றும் காத்துப் புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபடுத்துவதற்குப் பௌத்த வாழ்க்கை நெறிகளை மேற்கொள்வதே சாலச் சிறந்ததெனக் கருதுகிறார்கள்.

சயாம்:

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சயாமியர்கள் மகாயான பௌத்த மதத்தைப் பின்பற்றினார்கள். பிற்காலத்தில் தெரவாடா என்னும் ஹீனயான பௌத்த மதத்தைத் தழுவினார்கள். சயாமியர்கள் சீனாவிலிருந்து சயாமில் குடியேறுவதற்கு முன்பே பௌத்த மதத்தைப் பின்பற்றி இருக்கவேண்டுமென்று நம்பப்படுகிறது. கி. பி. பதினைன்காம் நூற்றாண்டில் சயாமை ஆண்ட மன்னனின் விருப்பத்திற்கிணங்க இலங்கை அரசாங்கம் ஒரு பௌத்த பிக்குவை அனுப்பியது. இப்பௌத்த பிக்கு சயாமில் உள்ள பௌத்த சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். சயாம் மன்னரும் அசோகரைப் பின்பற்றிப் பௌத்த மதத்தைத் தழுவினார். அன்றிலிருந்து இன்றுவரை சயாமில் அரச குடும்பத்தினருக்கும் பௌத்த சங்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவருகிறது. இலங்கை, பர்மா, சயாம் ஆகிய மூன்று நாடுகளும் தெரவாடா எனப்படும் ஹீனயான பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்றன. இலங்கையிலும் சயாமிலும் உள்ள பௌத்த பிக்குகள் மஞ்சள் நிறக் காவியுடை அணிகிறார்கள். ஆனால் பர்மாவில் உள்ள பௌத்த பிக்குகள் ஆரஞ்சு வண்ணக் காவியுடை அணிகிறார்கள். சயாமின் தலைநகரமான பாங்காக்கில் கலைத்திறன் மிக்கதொரு பௌத்த கோவில் காண்போர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

அரசாங்க ஆதரவு பெற்ற சயாமிய பௌத்த சங்கம் வலிவுடையதாய் விளங்குகிறது. இப்பௌத்த பிக்குகள் நவீன கருத்துக்களைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஆங்கிலம் கற்கிறார்கள். பிறமொழிகளில் உள்ள பௌத்தநூல்களைச் சயாமிய மொழியிலும், சயாமிய மொழியில் உள்ள நூல்களைப் பிறமொழிகளிலும் மொழிபெயர்ப்பதில் இப்பௌத்த பிக்குகள் பெரிதும் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும் சங்கத்தின் தலைமைப் பிக்குகள் சயாம் வானொலியில் வாரந்தோறும் உரை நிகழ்த்துகிறார்கள். இம் முயற்சிகளின் பலனாய்ச் சயாமில் பௌத்த மதம் செழிப்புற்று விளங்குகிறது.

கம்போடியா:

கம்போடியாவின் பெரும் பகுதி மக்கள் சீனர்கள்; ஏனையோர் கம்பூஜர்கள் அல்லது கிமர்கள் எனப்படுவார்கள். மக்கள், சீனர்களாய் இருந்தபோதிலும் அவர்களுடைய நாகரிகம் ஆதிகாலத்தில் இந்து நாகரிகமாகத்தான் இருந்தது. பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற இந்துக் கடவுள்களுக்குக் கோவில்கள் சமைத்து வழிபாடு செய்தார்கள். பின்னர் சீனாவின் செல்வாக்கு கம்போடியாவில் அதிகரித்தது. அதன் விளைவாகக் கம்போடியாவில் மகாயான பௌத்தமதம் பரவியது. கி. பி. பதினைன்காம் நூற்றாண்டு வரை கம்போடியர்களின் மதம் இந்து மதமும் மகாயான பௌத்த மதமும் கலந்த ஒரு கலப்பு மதமாக இருந்தது. இதற்குச் சான்றாகக் கம்போடியாவின் பழம் பெரும் கோவிலான அங்கார் வாட் இன்றும் விளங்குகிறது. பின்னர்ச் சயாமியர்கள் கம்போடியாமீது படையெடுத்துக் கம்போடியாவின் புராதனக் கோவில்களை அழித்தார்கள். இப் படையெடுப்பிற்குப் பின் கம்போடியாவில் சயாமின் செல்வாக்கு அதிகரித்தது. அதன் பலனாகத் தெரவாடா எனப்படும் ஹீனயான பௌத்த மதம் கம்போடியாவில் பரவிற்று. அண்மையில் கம்போடியாவில் பரவிய உள் நாட்டுச் சண்டைகள் காரணமாகப் பௌத்த மதம் சிறிது சிதைவுற்றது. இருப்பினும் சண்டையில் சலிப்புற்ற மக்கள் பௌத்த மதத்தை நாடுவதால் மேலும் மேலும் பல பௌத்த சங்கங்கள் கடந்த பல மாதங்களாக இந்நாட்டில் தோன்றி வருகின்றன.

சீனா:

கி. பி முதலாம் நூற்றாண்டில் தான் பௌத்த மதம் இந்தியாவிலிருந்து சீனாவிற்குப் பரவியது. சீன மன்னர் மிங்-டி கி. பி. 61-ல் தூதர்களை இந்தியாவிற்கு அனுப்பிப் பௌத்தமத நூல்களையும் பௌத்த பிக்குகளையும்கொண்டு வரச்செய்தார். அதன்படி இந்தியாவிலிருந்து இரண்டு பௌத்த பிக்குகள் தங்களுடன் புத்த விக்கிரகங்களையும் மகாயான பௌத்த நூல்களையும் மன்னரின் தலை நகருக்குக் கொண்டுசென்றனர். இவ்விரு பிக்குகளில் ஒருவர் இந்நூல்களைச் சீன மொழியில் மொழிபெயர்த்தார். அது முதற்கொண்டு பௌத்த மதம் சீனாவில் பரவத் தொடங்கியது.

இதற்கு முன் சீனர்கள் டாயிஸம் கன்புயூஸியனிஸம் என்ற இரண்டு மேம்பாடடைந்த மதங்களைப் பின்பற்றி வந்தனர். ஆகவே பௌத்த மதம் சீன மண்ணில் அடியெடுத்து வைக்கு முன்பே சீனர்கள் சிறந்த பண்பாடுடைய மக்களாய்த் திகழ்ந்தார்கள். இம்மக்கள் பௌத்த மதம் போதிக்கும் துறவற வாழ்க்கையையும், இறந்து உயிர் வாழ்தல் என்ற வாழ்க்கை முறையையும் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். அதன் விளைவாகச் சுமார் 300 ஆண்டுகள் வரையில் பௌத்த மதம் சீனாவில் அதிகமாகப் பரவவில்லை. பின்னர்க் கி. பி. நான்காம் நூற்றாண்டிலும் ஐந்தாம் நூற்றாண்டிலும் ஏராளமான பௌத்த நூல்கள் சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இத்துறையில் குமாரஜீவா என்பவரின் முயற்சி பாராட்டத் தக்கது இம் முயற்சிகளின் பலனாகச் சீன மக்களுக்குப் பௌத்த மதத்தில் ஒரு புது விருப்பமும் உற்சாகமும் ஏற்பட்டது. பௌத்த மதத்தைப் பின்பற்றுவோர் துறவிகளாவதற்கும், பௌத்த சங்கத்தை ஏற்படுத்துவதற்கும் அனுமதி கிடைத்தது. கி. பி. ஆறும் நூற்றாண்டில் வட

(18-ம் பக்கம் பார்க்க)



காஞ்சீபுரம்

25—11—'56

தம்பி!

தக்கோரைத் தேர்ந்தெடுத்து கலைத் தூதுக்குழுவிலே அனுப்பும் திறம் மத்திய சர்க்காருக்கு இல்லை, தட்டிக்கேட்கும் துணிவு, சென்னையில் இல்லை, அமைச்சர்களை அச்சம் தடுக்கிறது, துணிந்து சில வேளைகளில் கேட்டாலோ, மிரட்டல், விரட்டல், தான் கிடைக்கிறது என்று கூறினவர் யார் என்ற ஆவலைக் கொண்டிடச் செய்தேன அல்லவா—கோபமில்லையே என்மீது அதற்காக!!

மனம் நொந்து அவர் இதுபோல் கூறுகிறார்—அரசியல் துறையிலே ஈடுபாடு கொண்டவரல்ல — ஆசிரியத் தொழிலில் இருப்பவர் — அமைதியில் ஆனந்தம் காண்பவர்—அனைத்தையும் துருவித் துருவிக் கண்டறிவார். அவ்வளவும் சொல்லிவிடக்கூட மாட்டார் — இவ்வளவு போதும் — கோடிட்டுக் காட்டினாலும் போதும்—இப்போதைக்கு இவ்வளவு போதும் —என்று அவ்வப்போது அளந்து அளந்து கருத்து அளித்து வருபவர் —என் நண்பர் — தமிழருக்கு நல்லபல ஏடுகளைத் தந்துள்ளவர் — பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்பெரும் பேராசிரியராக இருப்பவர், டாக்டர். மு. வரதராசன்.

பழைய நாட்களிலே, தம்பி, எவருடைய இடித்துரைக்கும் கலங்காது காட்டாட்சி நடாத்துபவருங்கூட, புலவர்கள் புத்தி புகட்டுகின்றனர் என்றால், வெட்கப்படுபவர், வேதனைப்படுவர், திருத்திக்கொள்ள முற்படுவர் என்று இலக்கியங்களிலே காணுகிறோம்.

இன்றைய ஆட்சியினரோ, மக்களைப் பார்த்து, "பாமரர் நீவிர்! உமக்கு இதெல்லாம் என்ன தெரியும்!" என்று கூறியும், புலவர்களைப் பார்த்து, "ஏடு தூக்கிடும், உமக்கு ஏனய்யா இந்த வீண் வேலை" என்று ஏளனம் செய்தும் இறுமாந்து கிடக்கின்றனர்.

அதிலும், தமிழாசிரியர்கள்—அதிலும் குறிப்பாகத் தமிழ் இனத்துக்கென்று ஓர் தனி வாழ்வு அமைதல் வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்—ஆரியம இது, தமிழ் நெறி இது என்று பிரித்துக்காட்டிடும் போக்கினர் என்றால், பெருங்கோபம் பீறிட்டுக்கொண்டு கிளம்புகிறது.

அவர்களை, 'நாத்திகர்' என்று நிந்திக்கவும், ஆட்சியாளர்கள் துடித்தெழுகின்றனர்.

எனவே, டாக்டர். மு. வ. வின் இந்தக் கருத்துரை கேட்டு, ஆட்சியாளர் திருந்த முற்படுவர் என்று நான் எண்ணவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை—அவருக்கும் அந்த நம்பிக்கை எழுமா என்பது ஐயப்பாடுதான்! நேரடியாக அரசியல் துறையிலே ஈடுபாடு கொள்ளாதவரும், இன்றைய அரசியலில் தெளியும் நிலைமையைத்

மிரட்டல்! விரட்டல்!

கண்டு மனம் பொறுது பேச வேண்டி வந்ததே என்பதை நாடு காண்கிறது! அதன் பயன் மிகுதியும் உண்டு என்பது என் எண்ணம்.

அரசியல் துறைக்குத் தம்மை ஒப்படைக்காமல், பேதம் பிளவு என்பவை தீது, ஒற்றுமை சமரசம் என்பன நற்பண்புகள் என்பதை வலியுறுத்தத் தவறாமலிருக்கும் தமிழ்ப் பேராசிரியர்களே, டில்லியிடம் சிக்கிக்கொண்டு, நமது அமைச்சர்கள் அச்சத்தால் தாக்குண்டு கிடக்கும் நிலை கண்டு மனம் வெதும்புகின்றனர்.

பலருக்கு, பாரதம் ஒரே நாடு, இதனைத் தனித்தனி நாடுகளாக்கி விட்டால் ஒற்றுமை குலைந்து போகும் என்று டில்லிப் பெரியவர்கள் பேசும்போது, ஆம் என்றுதான் கூறத்தோன்றுகிறது. அதிலும் தமிழாசிரியர்கள், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நெறியினைப் பாராட்டுபவரல்லவா! எனவே, பாரதநாடு ஒரே ஆட்சியின் கீழ் இருத்தல் முறை என்று கூறப்படும்போது அவர்கள் இசைவு அளிப்பது மட்டுமல்ல, எம்மனோர் உலகு முழுவதையுமே ஒரே நாடு என்று எண்ணிச் சொந்தம் கொண்டாடிய பெருநோக்கினர்! இமயத்துடன் நிற்பானேன் — கடலையும் கடந்து எல்லா எல்லைக் கோடுகளையும் கலைத்தொழித்துக்கூட 'உலகு ஒன்று' என்ற உன்னதம் காணலாம் என்று உள்ளன்புடன் கூறத் தயங்குவதில்லை.

ஆனால், அவர்கட்கும் ஒற்றுமை ஓரரசு பேரரசு என்பதன் பேரால் அநீதி நடந்திடும்போது மனம் வெதும்புகிறது — இடித்துரைக்க முற்படுகின்றனர். ஆட்சியாளர்களோ, அரசியல் துறையினர் பேசும்போது, இதெல்லாம் அரசியல் வாதிகள் கிளப்பிவிடும் கேடுகள் என்று சுடுசொல் கூறியும், தமிழாசிரியர்கள் பேசும்போது, ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் படித்துக்கொண்டுகிடப்பதை விட்டு இந்த ஆசிரியர்கள் ஏன் அரசியலில் தலையிடவேண்டும் என்று அலட்சியமாகப் பேசியும் ஆணவப் போக்குடன் உள்ளனர்.

விரட்டல் மிரட்டல் டில்லியிடமிருந்து நாம் பெறுவது இவையே என்று கூறுமுன்னர், டாக்டர் பல நூறு முறை தயங்கியிருப்பார் — சொல்வதா வேண்டாமா? சொல்லிப் பயன்காண முடியுமா? சொல்வது கேட்டு, நம்மை இன்னார் என்று கண்டுகொண்டு காய்ந்திட மட்டுமே பயன்படுமோ? என்று பலப்பல வகையில் யோசித்துவிட்டு, முடிவிலேதான், இதனைச் சொல்லியே தீரவேண்டும் என்று துணிந்து கூறிவிட்டிருக்கிறார்.

தம்பி! கலைத்துறைப் பிரச்சினையில் மட்டுமே இந்த நிலையா என்றால் இல்லை, இல்லை, கலைத்துறைப் பிரச்சினையிலும் இது, என்றுதான் கூறவேண்டி இருக்கிறது. எந்தத் துறையிலும் இதே நிலைதான்! எந்தத் துறையிலும் டில்லி துரைத்தனம், தமிழர்க்கும் தமிழகத்துக்கும் இதே விதமான மிரட்டல் விரட்டல் அளித்துக் கொண்டுதான் அமுல் நடத்தி வருகிறது. அவ்வப்போது, ஒவ்வோர் துறையினர் உள்ளம் வெதும்பிப் பேசுவர்! மற்றத் துறையினர் அதுபோது, பிரச்சினை, எந்தத் துறையினர் மனம் நொந்து பேசுகின்றனரோ, அந்த ஒரு துறைக்கு மட்டுமே உரியது என்று எண்ணி, தமக்கு உரிய பிரச்சினை அல்ல என்று எண்ணிக்கொண்டு விடுகின்றனர்.

டாக்டர் மு. வ. கலைத்துறையில், டில்லி காட்டும் கருத்தற்ற போக்கினையும், சென்னையில் உள்ள அச்சத்தையும் எடுத்துக் காட்டும்போது, வாணிபத் துறையினர், இது தமக்குத் தொடர்பற்ற பிரச்சினை என்று இருந்துவிடுகின்றனர்; அதுபோன்றே வாணிபத்துறையில் எழும் பிரச்சினையில், டில்லி காட்டும் ஆணவப்போக்கினை, வணிகர் சங்கம் கண்டித்தெழும்போது, டாக்டர் மு. வ. போன்ற தமிழாசிரியர்கள், இது வணிகர்களின் பிரச்சினை, நமக்கு உரியதல்ல என்று ஒதுங்கி நிற்பர். எனவே, கூட்டு எண்ணம், ஏற்பட வழி கிடைப்பதில்லை. தம்பி! நாம், எந்தத் துறையுடன் நேரடியாகத் தொடர்புகொண்ட பிரச்சினையாக இருப்பினும், அந்தப் பிரச்சினை, 'டில்லி — சென்னை தொடர்பினை' எடுத்துக் காட்டுவதாக அமைந்தால், அந்தப் பிரச்சினையை நமக்கு உரிய பிரச்சினை—நாட்டு மக்கள் கவனிக்கவேண்டிய பிரச்சினை என்றுதான் கொள்கிறோம். இது தமிழாசிரியர் கவனிக்கவேண்டிய பிரச்சினை, இது துரைத்தன ஊழியருக்கு மட்டுமே உரியபிரச்சினை, இது பாட்டாளிகளுக்கு மட்டுமே சொந்தமானது என்று எந்தப் பிரச்சினையையும் நாம் ஒதுக்கிவிடுவதில்லை. காரணம், நமக்கு எந்தப் பிரச்சினையும், அந்த ஒரு பெரும் பிரச்சினை இருக்கிறதே, தனி அரசுகளை விழுங்கிக் கொழுத்து பேரரசு ஒன்று உருவெடுக்கும் பிரச்சினை, அதனுடைய பல கூறுகளிலே ஒன்றாகவேபடுகிறது.

'பிரிவினை' என்பது பொய்யுரை

பாகிஸ்தான் அமைப்புக்காக முசுலீம்கள் போராடிய காலத்திலும், அதற்குப் பிறகும் பாகிஸ்தான் பிரிவினை என்றும், பாரதம் வெட்டப்பட்டது, தேசம் துண்டாடப்பட்டது! என்றும் பேசுவதன் மூலம், அந்த அமைப்புக்கு ஒரு இழிவையும் பழியையும் சுமத்துகிறார்கள்; எனவே இனி, பிரிவினை என்று பேசலாகாது, எழுதலாகாது, பிரிவினை என்பது பொய்யுரை, சுதந்திரம் என்பதே உண்மையான பேச்சு, என்று பாகிஸ்தான் சர்க்கார் விளக்கமளித்திருக்கிறது. பிரிவினைக்கு முன்பு—பிரிவினைக்குப் பிறகு—என்ற சொற்றொடர்கள் எங்கெங்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ அங்கெல்லாம் சுதந்திரத்துக்கு முன்பு — சுதந்திரத்துக்குப் பிறகு என்று திருத்தப்படும். பாகிஸ்தான், பிரிவினை அல்ல, பிறப்புரிமை என்பது கருத்து.

கைகால் பிடிப்புக்காரன், தைலம் தடவியும், வலியுள்ள இடத்தை நீவியும் நலன்பெற முயல்வது இயல்பு என்றாலும்! வலிக்கு உள்ள காரணம் களைந்திடுவதற்கான மருத்துவம் பார்த்துக்கொண்டாக வேண்டுமல்லவா, நாம் அந்த நல்ல மருந்து தேடுகிறோம். அதுபோது, ஐயோ முதுகு எலும்பு வலிக்கிறதே! கண் எரிச்சல் தருகிறதே! கைகால் பிடிப்பு ஏற்பட்டுவிட்டதே! குமட்டலெடுக்கிறது, குடைச்சலுமிருக்கிறது! என்று அவரவர் தத்தமக்குவந்து தாக்கும் வலிபற்றி வாய்விட்டுக் கூறிடக் கேட்கிறோம் — கேட்கும் போது நமக்கு, இவையாவும், தனித்தனி நோய்களல்ல, வெறும் குறிகள், என்று புலப்படுகிறது.

கலை, மொழி, எல்லை எனப்படும் துறைகளிலே மட்டுமே தமிழருக்கு மிரட்டல்—விரட்டல் டில்லியிடமிருந்து கிடைக்கிறது, மற்றமற்ற துறைகளிலே !அரவணைப்பு கிடைக்கிறதா! எல்லாத் துறைகளிலும், ஏன்? என்ற குரல் கேட்கும் போதெல்லாம், மிரட்டல்—விரட்டல்!!

தம்பி! டில்லியில், சென்ற திங்கள், இந்தியப் பேரரசு பல்கலைக் கழக இளைஞர் விழா நடத்திற்று. இதில் 31 பல்கலைக் கழகங்கள் கலந்துகொண்டன. 1600 மாணவர்கள் சென்றனர், நேருபண்டிதர் இதில் கலந்துகொண்டு சிறப்பளித்தார்.

சென்னைப் பல்கலைக் கழகம் மட்டும் இந்த விழாவிற்குப் பிரதிநிதிகளை அனுப்பிவைக்கவில்லை.

பாட்டும் கூத்தும், கேளிக்கையும் நிறைந்த விழா — ஒவ்வோர் பல்கலைக் கழகமும் தத்தமது கோட்டத்தில் வளர்ந்துள்ள கலைத் திறனைக் காட்டிடும் வாய்ப்பு—இதிலே சென்னைப் பல்கலைக் கழகம் கலந்துகொள்ளவில்லை. **காரணம் என்ன?**

இந்தியப் பேரரசு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளைப் புறக்கணித்தது. மதியாதார் தலைவாசல் மிதிக்கமாட்டோம் என்று சென்னைப் பல்கலைக் கழகம் கூறிவிட்டது,

இந்த விழா, ஆண்டுதோறும் டில்லியிலேயே நடத்துகிறீர்கள்—இது சரியல்ல—ஒவ்வோர் ஆண்டு ஒவ்வோர் 'ராஜ்ய'த்தில் நடத்துவதுதான் நல்லது என்று சென்னைப் பல்கலைக் கழகம் கூறிற்று. இந்தச் சாதாரணமான நியாயத்தைக்கூட ஏற்றுக்கொள்ள டில்லிக்கு விருப்பம் இல்லை.

டில்லி ஒரு திட்டம் வகுப்பது, அதை முறையில்லை, சரியில்லை என்று கூறி, சென்னை மறுப்பதா!

நந்தா! உனக்கேன் இந்தப் புத்தி!

டில்லியின் போக்கு இதுபோலிருந்திருக்கவேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் யோசனையைப் புறக்கணித்தது.

புண்பட்ட மனம்; சென்னைப் பல்கலைக் கழகம், இதனைக் காட்டவும், தன் கண்டனத்தைத் தெரிவிக்கவும் டில்லி விழாவில் கலந்துகொள்ளவில்லை.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல பாடங்கள் போதிக்கப்படுகின்றன, ஆனால் திராவிட நாடு திராவிடருக்கே என்பது பாடமாக்கப்பட்டதில்லை! சென்னைப் பல்கலைக் கழகம் கேட்டதெல்லாம் 'விவரமான கோரிக்கை' — அதற்கே டில்லி இணங்கவில்லை.

சென்னைப் பல்கலைக் கழகம் என்ன செய்யும்? என்ன செய்தார் டாக்டர் மு. வ! கலைத் தூதுக்குழு சம்பந்தமாக டில்லி காட்டும் போக்கைக் கண்டு மனம் வெதும்பி—மிரட்டல்—விரட்டல் என்று கூறினர்.

இரத்தக் கடிதம்

சென்னை முதல் மந்திரி காமராஜருக்கு பர்மா தேசத் தமிழர்கள் இரத்தக் [கையெழுத்துப் போட்ட கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள்.

பர்மா தலைநகரான இரங்கூன் நகரத் தமிழர்கள் 18 பேர் இக் கடிதத்தில் அவர்களுடைய உடல் இரத்தத்தால்கையெழுத்துப்போட்டிருக்கிறார்கள். இவர்கள் இரங்கூன் நகரில் உள்ள தென்னிந்திய ஓட்டலில் வேலை செய்பவர்கள். அந்தக் கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது:-

சென்னை மாகாணம் என்ற பெயரைத்தமிழ்நாடுஎன்று மாற்றக் கோரி தமிழர்கள் எவ்வளவோ தடவை கோரிக்கை விடுத்தும் கண்டித்தும் பேசியும் சென்னை அரசாங்கம் இதுவரை மவுனம் சாதிப்பது வியப்புக்கு உரியது. இங்கிலையிலே விருதுநகர் உயிர்த்தியாகி சங்கரலிங்க நாடார் இந்தக் கோரிக்கைக்காகவே உயிர் விட்டார். அப்படியும் சென்னை சர்க்கார் ஒருவித நல்ல நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டு இரங்கூன் வாழ் தமிழர்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். அதன் அடையாளமாகநாங்கள் இரத்தத்தால் கையெழுத்துப் போட்டு காமராஜருக்கு அனுப்புகிறோம். இரத்தக் கடிதம் கடல் கடந்த தமிழர்களால் அனுப்பப் பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையையும் சென்னை சர்க்கார் நிராகரித்துவிடுமா? அல்லது தமிழ்நாடு என்று பெயர் வைக்க நடவடிக்கை எடுக்குமா? வாழ்க தமிழ்நாடு!

இவ்வாறு பர்மா தமிழர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

அந்தக் கடிதத்தில் இரத்தக் கையெழுத்துப் போட்டுள்ளவர்கள் பின் வருமாறு:-

ஆர். கிருஷ்ணன், எம். சேதுராமன், பி. பூமிநாதன், எஸ். வி. சின்னசாமி, ஆர். சந்திரன், இரத்தினம், சா. குருசாமி, க. தங்கவேலு, கு. அழகர்சாமி, எல். ஜெகநாதன், சிங்கராயர், ஏ. கந்தன், எஸ். பாண்டியன், பி. நாதன், கா. குருசாமி, இரா. முத்து.

★

சென்னை பல்கலைக் கழகம், விழாவில் கலந்துகொள்ளாது ஒதுங்கி நின்றது! அவ்வளவுதான்!!

சென்னைப் பல்கலைக் கழகம் இதுபோல் நடந்துகொண்ட காரணம் என்ன என்பதுகூடப் பொது மக்களுக்குத் தெரியாது. தெரிவிக்கப்பட்டாலும், மற்றத் துறையினர் இது குறித்து அக்கறை காட்டி, இது டில்லி ஆதிக்கத்தின் ஒரு 'கூறு'தான் என்று கூறிட முன்வந்திருப்பார்களா என்பதும் சந்தேகமே!

ஒன்றுபட்டு, தமிழகம் தன் உள்ளக் கொதிப்பை எடுத்துக் காட்டும் வாய்ப்பே ஏற்படவில்லை.

கலை, கல்வித்துறை பற்றிய பிரச்சினை நம்முடையதல்ல என்று மற்றவர்களும், எல்லை, உரிமை, என்பன அரசியல் வாதிகளின் ஆயாசப் பேச்சு என்று கலை கல்வித்துறையினரும், வாணிபம், இலாப வேட்டைக்காரர் பிரச்சினை, இதில் நமக்கென்ன அக்கறை என்று பிற துறையினரும், இவ்விதம், ஒவ்வொருவர் ஒவ்வோர் 'மூலை'யில் மட்டும் பார்வையைச் செலுத்திக் கொண்டு, பிறபிரச்சினைகளில் கருத்தைச் செலுத்துவதே தேவையில்லை என்று எண்ணும் போக்குக் காண்கிறோம். அது மட்டுமல்ல; இவர் ஒவ்வொருவரும், எதற்கும் 'பிள்ளையார் சுழி' போடுவது என்பார்களே, அதுபோல, டில்லியின் போக்கைக் கண்டிக்கக் கிளம்பும்போதே, எமக்கு இந்தியா ஒரு நாடு என்பதிலோ இந்தியர் ஓர் இன மக்கள் என்பதிலோ, ஐயம் இல்லை. நாங்கள், நாடு துண்டாடப்பட வேண்டும் என்ற தீய கொள்கை கொண்டோரல்ல! இந்தியாவின் ஐக்யமே, எமது பேச்சு, மூச்சு; என்ற 'துதி' பாடிவிட்டுத்தான், தமது கண்டனத்தை வெளியிடுகின்றனர். இப்படிப்பட்ட 'அடக்கமான'வர்களுக்கே, டில்லி வழங்குவது, மிரட்டல், விரட்டல்!

எத்தனை காலத்துக்கு, எத்தனை பிரச்சினைகளுக்கு, இப்படி இரு கரம் கூப்பி, ஐயா! ஐயா! என்று இறைஞ்சி நின்று, இடியும் கடியும் பட்டுத் தீரவேண்டும் என்று இவர்கள் எண்ணுகிறார்களோ, தெரியவில்லை.

தம்பி, ஒன்று புரிகிறது. இன்று எனக்கு வந்த தபாலில், டில்லியிலிருந்து வெளியாகும், இந்துஸ்தான் டைம்ஸ் இதழிலிருந்து ஒரு துணுக்கு வெட்டி அனுப்பிவைத்திருந்தார் ஒரு நண்பர். இந்த இதழ் மகாத்மாவின் புத்ரரும் ஆச்சாரியாரின் மருகருமான தேவதாஸ் காந்தியை ஆசிரியராகக்கொண்டது.

இடியும் கடியும் பொறுத்துக் கொண்டு, வலியையும் வெளியே தெரியவிடுவது நாகரிகமல்ல வென்று கருதிக்கொண்டு, கரம் கூப்பிச் சிரம் தாழ்த்தி, கண்ணீர் பொழிந்து கனிவு பெறலாம் என்று காத்து நிற்போர் மட்டுமல்ல, தமிழகத்தில் விளைவு விபரீதமாகுமோ, அடக்குமுறை அவிழ்த்துவிடப்படுமோ என்பது பற்றிய அச்சமற்று, வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் ஓர் கழகம் இருக்கிறது, அது, தி. மு. க. என்பதை, டில்லி வட்டாரத்து ஏடு புரிந்துகொண்டிருப்பது, நன்றாகத் தெரிகிறது.

இந்துஸ்தான் டைம்ஸ் இதழில், தி. மு. க. தேர்தலில் ஈடுபட இருப்பது பற்றிய குறிப்புரை வெளிவந்திருக்கிறது.

வழக்கமான வசையும்—சாபமும் காண்கிறேன், குறிப்புரையில்.

கச்சையை வரிந்துகட்டிக் கொண்டு காமராஜர் கிளம்பிவிட்டார், எனவே இந்த தி. மு. க. தோற்று அழிந்துபோகும் என்று அந்த இதழ் 'ஜோதிடம்' கூறுகிறது.

பிறகோ, அந்த ஜோதிடத்தில் அதற்கு நம்பிக்கையில்லாமல், இந்த தி. மு. க., திராவிடநாடு, தனிநாடு என்றெல்லாம்பேசுகிறது—இப்படிப்பட்ட பேச்சுக்கு இந்திய அரசியல் சட்டத்தில் இடமில்லை என்று எடுத்துக்காட்டி, வக்கீலாகிறது; வழக்கறிஞர் வேலையில் மற்றவர்களும் ஈடுபட்டு, இந்திய அரசியல் சட்டத்தில் அதற்கு இடம் இல்லை என்றால் என்ன, ஐயா! அதற்கு இடம் இருக்கும் வகையில், இந்திய அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என்பதை எடுத்துக்காட்டி, மக்களிடம் பேசலாமல்லவா, என்று வாதாடக்கூடுமே என்ற அச்சம் பிறக்கிறது. உடனே, வழக்கறிஞர் வேலையை விட்டுத் தொலைத்து, போலீஸ் வேலையை இந்த இதழ் மேற்கொண்டு, தி. மு. கழகத்தை இனியும் சும்மா விட்டுவைக்கக் கூடாது! இராஜத்துரோகக் குற்றம் செய்கிறது இந்தக் கழகம்! உடனே தகுந்த நடவடிக்கை எடுத்து, தி. மு. கழகத்தை ஒடுக்கித் தீரவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கிறது.

ஜோதிடர் வேடம் கண்டு சிரிப்பு வருகிறது, வழக்கறிஞர் கோலம் காணும்போது பரிதாபமாக இருக்கிறது, போலீஸ் குரலில் பேசக் கேட்கும்போதோ, இந்த இதழிடம் எனக்கு அனுதாபம்கூட ஏற்படுகிறது. எவ்வளவு கிலி, பாபம் இந்த இதழுக்கு.

இந்துவும் மித்திரனும் இடம் அளிப்பதில்லை, கல்கியும் விகடனும் கவனம் செலுத்துவதாகக் காட்டிக்கொள்வதில்லை, காட்டுக் கூச்சல், கவைக்கு உதவாப் பேச்சு என்று காமராஜர்கள் கூறிவிடுகின்றனர், இந்த நிலையிலேயே டில்லியில் உள்ள ஏடு, தீ பட்டது போலத் 'தகதக'வென ஆடி, தடு எடு! தடைபோடு! தடைபோடு! என்று கொக்கரிக்கிறது. தம்பி! நீயும் நானும் விரும்புகிறபடியும் நாட்டில் நல்லோர் பலரும் எதிர்பார்க்கிறபடியும், பொதுத் தேர்தலிலே நமக்குச் சிறப்பான வெற்றி கிடைத்து, நாம் ஆட்சி மன்றத்திலேயும் அமர்ந்து, நமது உரிமைமுழக்கத்தை நடாத்தினால் ஏ! அப்பா! இந்துஸ்தான் டைம்ஸ் போன்ற ஏடுகள் என்னபாடுபடுமோ

(15-ம் பக்கம் பார்க்க)

தணலில் தங்கம்

10

கள்ளமற்ற அவருடைய சிரிப்பில் மயங்கிக் கிடந்தோமே ஒழிய அவர் யார் என்றே நாங்கள் அறியவில்லை. எப்படி அறிவது? அவர் கொடுத்த முகவரிச் சீட்டையும் எங்கோ வைத்து மறந்துவிட்டேன். அது கிடைத்தால் மட்டும் என்ன, அவர் எதிரிலேயே அதை எடுத்துப் படித்து "நீங்கள் இன்னார்' என்று சொல்லமுடியுமா? அதனால் தான் அவர், "நான் யார் தெரியுமா?" என்று கேட்டபோது ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தோம்.

அந்த அம்மையாரே மேலும் தொடர்ந்து பேசினார்.

"கண்ணகி இல்லம் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். சென்னையின் தென் கோடியில் இருக்கிறது. நான்தான் இப்போது அதை நடத்துகின்றேன். கருங்குழலி என்பது என் பெயர்" என்றார்.

அதைக்கேட்டு நான் வியப்பில் மூழ்கிப்போனேன். ஒரு பெரிய நிலையத்தின் தலைவி இவ்வளவு எளிமையாக, சாதாரணமாக வந்து பழகி உதவியாக இருக்கின்றார்களே என வியந்தேன். அந்த அம்மையாரின் தொண்டு உள்ளத்தையும் அன்பான பேச்சையும் நினைந்து மகிழ்ந்தேன்.

ஆனால் அந்த வியப்பு, மகிழ்ச்சி இவைகளுக்கு இடையிலும் என் மனம் வேறு ஒன்றைப்பற்றி எண்ணியது. கருங்குழலி என்று அவர்கள் பெயர் சொன்னார்கள். கூந்தல் எப்படி இருக்கிறது என்று உற்று நோக்கினேன். அன்று ஒரு நாள் சாலையில் திக்கற்றுக் கிடந்த எனக்கு வழிகாட்டிய போது அவ்ரைப் பார்த்திருக்கின்றேன். என்றாலும் குழல் கருமையானதுதானா என்று அறிய உற்றுப் பார்த்தேன்.

இங்கொன்றும் அங்கொன்றுமாக இடையிடையே தலைமயிர் கருமையைத் துறந்து வெண்மையை ஏற்றுக் கொண்டிருந்தது.

ஆனால் பெயர் ஏன் கருங்குழலி என்று இருக்கின்றது? பெயரைப் பார்த்தால் அவராக இட்டுக்கொண்ட பெயர்போல் தோன்றுகின்றதே! ஏன் பொருந்த அமைத்துக்கொள்ளக் கூடாது என்று எண்ணினேன். இவரிடம் எதையும் கேட்கலாம் என்ற துணிவு எப்படியோ பிறந்தது.

'பொருத்தமாகஇல்லைப்போல்இருக்கிறதே அம்மா?' என்றேன்.

'பொருத்தமில்லைதான் கொஞ்சம். இன்னும் சில ஆண்டுகளாகிவிட்டால் முற்றிலும் பொருந்தாதுதான்—ஒப்புக்கொள்ளுகின்றேன். ஆனால் இந்தக் குறுக்கு யோசனை வடமொழிப் பெயர்களைக் காணும்போது ஏன் வருவதில்லையோ நம்மக்களுக்கு? கிருஷ்ண வேணி என்ற என் பழைய பெயரைச் சொல்லி இருந்தால் இந்தக் கேள்வியை நீ கேட்டிருப்பாயா?' என்றார்.

நியாயமான அவருடைய வினவைக் கேட்டு நான் நாணினேன். நம்மில் பலர் வடமொழியில் பெயர்கள் அமைந்திருந்தால் அந்தப்பெயருக்கும் அதை உடையவருடைய பண்புக்கும் என்ன பொருத்தம் என்று ஆராயாது இருக்கின்றனர். ஆனால் அத்தி பூத்தது போல் யாராவது தூய தமிழ்ப் பெயரைக் கொண்டால் அப்போது மட்டும்

மா. கி. தசரதன்

வேண்டாத சொல்லாராய்ச்சியில் இறங்குகின்றனர். அதற்கு நானே எடுத்துக்காட்டாகிவிட்டேனே எனத் தலைகுனிந்தேன்.

"நீ மட்டும் அல்ல தங்கம்; அப்படி. எல்லாரும் இதுபோல்தான் இருக்கின்றனர். எங்கள் கல்லூரியில் ஒரு பேராசிரியை. மிகவும் வடமொழிப் பற்றுடையவள். வடமொழியில் பற்று இருந்தால் கவலை இல்லை, ஆனால் அவள் தமிழ்மொழியை வெறுப்பவள். "பிராண வாயு" என்று இருக்கும் சொல் தமிழல்லவே என்று 'எரியகம்' என்று ஒரு நூலில் எழுதி இருந்தது. எரியகம் என்ற சொல் முற்றிலும் சரி இல்லை, என்றே வைத்துக்கொண்டாலும் பிராண வாயுவைவிட எவ்வளவோ மேலானது. ஆனால் அந்தப் பேராசிரியை 'எரி அகம், என்ன எரியகம் பிராண வாயு என்ன நெருப்பு வீடா?' என்று கேட்பாள். எங்கோ வெளிநாட்டில்வாழும் வேற்று மொழியாளர் பகையைவிட இவர்களுடைய தடையே தமிழ்மொழிக்கு ஊறு செய்வது ஆகும். உன்னைச் சொல்லுகின்றேன் என்று வருந்தாதே. மற்றவர்களைச் சொன்னேன்" என்றார்கள்.

தமிழ் பற்றிப் பேசும்போது இவ்வளவு உணர்ச்சியுடன் பேசுகின்றாரே என வியந்தேன்.

"என்னவோ கேட்க என்னவோ பேசினோம். நேரமாகிறது, நான் போய் வருகிறேன். அடுத்த ஞாயிறு காலை வருகிறேன். அதற்குள் நீங்கள் ஒரு முறை தங்கத்தின் கணவர் வீட்டுக்குப் போய் முயன்று பாருங்கள்". என்று சொல்லியவாறு எழுந்துவிட்டார்.

எங்கோ பிறந்த மூலிகை உதவி செய்து உடல் நோய் தீர்ப்பதுபோல் இந்த அம்மையார் எங்கோ பிறந்து வளர்ந்து வாழ்ந்தாலும் உதவி செய்து மனநோய் தீர்க்கின்றாரே என எண்ணினேன்.

அவர் மொழியில் ஆறுதல் கண்டேன். கைகுவித்து "வாருங்கள் கட்டாயம்" என வழி அனுப்பினேன். என்னை நோக்கி ஒரு புன்னகையை வீசினார்கள்.

கருங்குழலி அம்மையார் சொன்னபடியே அப்பா அங்கே போய்வந்தார். ஒரு முறை அல்ல இரண்டு முறையிலும் அவர் கண்டது ஏமாற்றமே. கணவர் அவருடன் பேசவே இல்லையாம். ஓரகத்தியின் கணவரைக் காணவே இல்லையாம். ஓரகத்தியே முன்வந்து "வேண்டாம் என்றால் வேண்டாம்? ஏன் நடையாய் நடக்கின்றீர்கள் கண்ட கழிசடைகள் எல்லாம் எங்கள் வீட்டிற்கு வரவேண்டாம்" என்று சொல்லிக் கதவை அடைத்துவிட்டாளாம். அம்மாவிடம் இந்தச் செய்தியைச் சொன்னபோது அப்பாவின் கண்களும் கலங்கின. அம்மாவும் அலறித் துடித்தாள். "அப்போதே சொன்னேனே கேட்டீர்களா? அந்த இடம் வேண்டாம் வேண்டாம் என்று முட்டிக்கொண்டேனே!" என்று கதறினாள். அவளுக்கு ஏதும் மறுமொழி சொல்ல இயலாமல் அப்பா திகைத்தார்.

இந்த இரண்டு மூன்று மாதங்களில் அப்பாவும் அம்மாவும் துரும்பாக

இளைத்துப் போனார்கள். என்றால் அவர்களுக்கு இந்த வயதில் வீண் கவலையா என நொந்தேன். எவ்வாறு அவர்களைத்தேற்றுவது என்று அறியாது தவித்தேன்.

கருங்குழலி அம்மையார் மட்டும் அறிமுகமாகவில்லை என்றால் எங்கள் குடும்பம் கலங்கிக் கலகலத்துப் போயிருக்கும். அந்த அம்மையாரே உற்ற பெருந்துணையாக வந்து வாய்த்தார்கள்.

ஒரு நாள், "ஏன் இப்படிக் கலங்கிப் போகின்றீர்கள்? கணவனுடன் சேர்ந்துவாழ்ந்தால் மகிழ்ச்சி அடையலாம். அது இயலாதபோது ஏன் துன்பப்படவேண்டும். நாமாக விரும்பிப் பிரிந்து வாழவில்லை, அப்படி ஆகிவிட்டது. இனி வருந்தித்தான் என்ன பயன்? என்னையே பாருங்களேன், என்னைப் பார்த்தால் கணவனால் கைவிடப்பட்டவளாகக் கருதுகின்றீர்களா?" என்றார்.

நாங்கள் திடுக்கிட்டோம். அந்த அம்மையாரின் முகத்தைக்கண்டேன், அங்கே அமைதி அரசோச்சியது. துன்பத்தின் சாயலே காணோம். அவர்களே மேலே தொடர்ந்து பேசினார்கள்.

"தெரியாது. என்னை இப்போது காண்பவர்கள் யாரும் அப்படிச் சொல்லமாட்டார்கள். ஆனால் என் மனதில் முதலில் இருந்தவேதனையை எப்படிச் சொல்வது?

"நீயாவது தங்கம் இன்னும் சில மாதங்களில் தாயாகப் போகின்றாய். உன்னைவிட என் துன்பம் கொடியது குழந்தாய். நான் தாய் ஆகி இப்படித் தவிக்க நேரிட்டிருந்தாலும் அவ்வளவாக வருந்தி இருக்கமாட்டேன். தாய் ஆகாததினால் என் தவிப்பு அதிகமாகியது" என்றார்கள்.

நாங்கள் ஒன்றும்புரியாமல் திகைத்தோம். குழம்பிய மனத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்தோம். அந்த அம்மையார் கண்களின் ஓரங்களைத் துடைத்துக்கொண்டு மேலே பேசினார்கள்.

"உங்களுக்குப் புரியாது. புரியக்கூடிய கதையா அது. உங்களிடம் சொல்வதில் என்ன இருக்கிறது? இதில் ஒளிவு என்ன மறைவு என்ன?

திருமணம் ஆன புதிதில் நானும் அவரும் எவ்வளவோ அன்பாகத்தான் பழகினோம். நிறைந்த செல்வம் நெருங்கிய உறவு, அன்பாக எங்கள் மண வாழ்க்கை தொடங்கியது. கலகலவெனச் சிரித்துப் பேசியபடியே கனவுலகில் திரிந்துகொண்டிருந்தோம். இன்பத்தின் எல்லை என்று எதைச் சொல்வது என்றே எங்களுக்குத் தெரியாது. எங்கள் மகிழ்ச்சியில் நான் கருவுற்றதுகூடத் தெரியாமல் காலங்கழித்தோம். வயிற்றுள் வளரும் கருவைப்பற்றி நாங்கள் கவலைப் படவில்லை என்றாலும் அந்தக் கரு எங்களைக் கவலைப்பட வைத்துவிட்டது.

கரு உயிர்த்ததும் பெண்களுக்கு நிறைய ஓய்வு தரவேண்டும், அமைதியானமனம் இருக்கவேண்டும். இப்போது தெரிகின்றது எனக்கு இந்த உண்மைகள் எல்லாம். அப்போது எப்படித் தெரியும்? யாராவதுசொல்லி இருந்தால்தான் கேட்டிருப்போமா?

இரவெல்லாம் நெடுநேரம் கண் விழித்துக் கூத்துக்கும் பாட்டுக்கும் போவதும் வருவதுமாக எங்கள் வாழ்க்கை நடைபெற்றது. ஓய்வு தூக்கம் என்பன நான் அறியாதன. என் இள உள்ளம் இன்பத்தின் எதிரில் மற்றவற்றைப்பற்றி எண்ணவே இடம் தரவில்லை. அதன் விளைவு எப்படித்தங்கம் நான் சொல்வேன்?" என்றார்.

இதுவரை உணர்ச்சி வயப்பட்டு பேசிக்கொண்டிருந்தவர் மெல்ல மெல்ல அமைதியானார். அப்போதுதான் அங்கே அப்பா இருந்ததைக் கண்டவர்போல் கொஞ்சம் தயங்கினார்.

அப்பாவும் மெல்ல எழுந்து வெளியில் சென்றார். அந்த அம்மையார் மேலே தொடர்ந்தார்கள்.

"ஓய்வும் அமைதியும் இல்லாமற் போகவே, வளர்ந்து வாழவேண்டிய கரு சிதைந்து அழிந்தது. அப்பா... இப்போது நினைத்தாலும் அந்தத் துன்பம் என் மனக்கண் முன்வந்து என்னை அச்சுறுத்துகின்றது. என்ன வலி என்ன துன்பம்!

அவ்வளவு வலியையும் துன்பத்தையும் கணவரின் அன்பான முகத்தைக் கண்டு பொறுத்திருந்தேன். மருத்துவ மனையில் கட்டிலின் அருகில் கவலையே உருவாய் அமர்ந்திருக்கும் கணவரின் முகத்தைக் கண்டு என் துன்பம் பறந்துபோகும். என்னைத் தேற்றி மனம்தேற வரும் அவருக்கு நான் தேறுதல் சொல்லுவேன். நோயாளியே வைத்தியர்க்கு மருந்து கொடுப்பதுபோலத்தான். வைத்தியரே மருந்து கொடுத்திருந்தால் என் வாழ்க்கை அப்போது கெட்டிருக்காது. சில நேரங்களில் வைத்தியர் வர நேரமாகும். வேலை மிகுதி அவருக்கு. ஆகவே நர்ஸ் ஒருத்தியிடம் மருந்து கொடுத்தனுப்பிவிடுவார். மாலையில் மட்டும் வந்து என்னைப் பரிசோதிப்பார்.

அவள்மீதும் குற்றம் சொல்ல எனக்கு மனம் வரவில்லை. சிரித்துச் சிரித்துப் பேசுவாள். கவலையைப் போக்கப் பெரிதும் அவள் பேச்சு எனக்குப் பயன்பட்டது. பாகாய் உருகி உட்கார்ந்திருக்கும் கணவரிடம் "என்ன இப்படி ஒரே அடியாக வருந்துகின்றீர்கள்? சில நாட்கள் பிரிவதற்கே இந்தக் கவலையா?" என்றும் "நாங்கள் இல்லையா? பார்த்துக் கொள்ளுகின்றோம். கவலைப்படாதீர்கள்" என்றும் சில நேரங்களில் சொல்லி அவரைத் தேற்றுவாள். நான் மருத்துவ மனையைவிட்டு வீட்டிற்கு வர மூன்று மாதங்கள் ஆயின. மூன்று மாதங்களுக்குப்பின் நோய் விட்டு வந்த நான் மருத்துவரின் ஆணை ஒன்றை ஏற்று வீட்டிற்கு வந்தேன்.

"உன் வயிறு மிகவும் கெட்டிருக்கிறது அம்மா. இன்னும் ஒரு ஆண்டு உடல் உறவே இல்லாமல் இருப்பது நல்லது" என்று கட்டளை இட்டிருந்தார் மருத்துவர்.

அந்தக் கட்டளைதான் என் வாழ்க்கையின் போக்கையேமாற்றிவிட்டது.

நான் எதைச் சொல்வது எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை.

அன்பான கணவரிடம் மெல்ல மெல்ல வம்பு தலைகாட்டுவதை உணர்ந்தேன். அந்தக் கதை எல்லாம் எதற்குத் தங்கம் இப்போது? சுருக்கமாகவே சொல்லிவிடுகின்றேன். நான் முன்னே சொன்ன நர்சுக்கும் இவருக்கும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. அந்தப் பழக்கம் மாற்றமுடியாதபடி பிணைந்துவிட்டது. உடல் உறவே கூடாது என்று மருத்துவர் இட்ட கட்டளையால் நான் எப்படியும் அவரைத் திருத்த முடியாமல் போய்விட்டது. பல நாட்கள் அழுது அழுது அரற்றினேன். அலறினேன். என் அழுகை வெறும் ஓலமாகத்தான் அவர் காதுகளுக்கு எட்டியது. கூக்குரல் என்று தூற்றினார். கொடும்பாவி என்று இகழ்ந்தார். கொலையே செய்துவிடுவார் என்று அஞ்சினேன். வீட்டைத் துறந்து வீணாட்டம் ஆடினார். என்ன செய்வது என்று தெரியாமல் ஏங்கித் தவித்த நான், அடையாற்றில் இருந்த என் தோழி ஒருத்தியின் துணையால் மெல்ல மெல்ல மன ஆறுதல் பெற்றுவந்தேன். அந்த முத்தம்மாதான் இந்தக்

கண்ணகி இல்லத்தின் தாய். அவள் தொடங்கிவைத்ததைத்தான் நான் இப்போது நடத்திவருகின்றேன். என் துன்பம் எல்லாம் இப்போது எங்கோ பறந்துவிட்டது.

கணவர் இறந்தார் என்ற சேதியைக் கேட்டபோதுகூட எனக்கு இந்த இல்லம்தான் ஆறுதல் தந்தது.

திக்கற்ற குழந்தைகளின் தீங்கற்ற முகங்களைக் கண்டு ஆறுதல் பெறுகின்றேன்; அமைதி உறுகிறேன். இப்போது இல்லமே என் வாழ்வாகி விட்டது.

என்று முடித்தபோது நான் என்ன சொல்வது என்றே தெரியாமல் திண்டாடினேன்.

"சரி வருகிறேன் தங்கம் நேரமாகிறது" என்று சொல்லிக்கொண்டே அந்த அம்மையார் தெரு வாயிற்படியைக் கடந்தார்.

நானும் அம்மாவும் வாயில் வரை வந்து கை கூப்பினோம்.

திண்ணைமேல் உட்கார்ந்திருந்த அப்பா எழுந்து,

"என்னம்மா அதற்குள் அவசரம்?" என்றார்.

"போகவேண்டும், வேலை இருக்கிறது. நெடுந் தொலைவு, பாருங்கள் என்றார்.

பிறகு எதையோ எண்ணியவர் போல்,

நீங்கள் ஒருநாளைக்கு வாருங்களேன் இல்லத்தைப்பார்த்துவரலாம் இடமாற்றம் கொஞ்சம் ஆறுதலாகவும் இருக்கும் என்றார் அம்மாவையும் அப்பாவையும் பார்த்து.

"எங்கே கொடுத்துவைத்திருக்கின்றோம் நாங்கள். குழந்தை நல்லபடி பெற்றுப் பிழைத்தால் பிறகு பார்க்கலாம்" என்றார் அம்மா.

அதைக் கேட்டதும் குழலியாரின் புருவங்கள் உயர்ந்தன.

"இந்தப் பேச்சுதானே நம்மைக் கெடுப்பது? எதற்குக்கொடுத்துவைக்க வேண்டும்? யாரிடம் எப்போது எதைக் கொடுத்துவைப்பதுபணமோபிறவோ மிகுதியானால், நம்மிடம் பாதுகாப்பு இல்லாதுபோனால் நம்பியவர்களிடம் கொடுத்துவைத்துப் பிறகு பெற்றுக் கொள்ளலாம். சென்னைக்குப் போவதற்குக் கொடுத்துவைப்பது என்ன வேண்டி இருக்கிறது. பொருளற்ற பேச்சுக்களை ஏன் பேசுகின்றீர்கள்?"

என்று சினங்கொண்டவர்போல் பேசினார்.

ஆமாம் அம்மா. என்னமோ தெரியாமல் சொல்லிவிட்டேன். எனக்கு என்ன தெரியும் என்று அம்மா சமாதானத்திற்கு வந்துவிட்டார்கள்.

அப்பா ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். சற்று நேரம் கழித்து,

"அம்மா. நான் ஒன்று சொல்லுகின்றேன். உங்களுக்குத் தடை இல்லையானால் கேளுங்கள்" என்றார் கருங்குழலியாரைப் பார்த்து.

"என்ன? சொல்லுங்கள்" என்றார் அவர்.

"எனக்கு இந்த ஊரிலேயே இருக்கப் பிடிக்கவில்லை. வெறும் வாயை மெல்லுகின்றவர்கள் இங்கிருப்பவர்கள். அவர்களுக்கு இப்போது அவல் கிடைத்தது போலாயிற்று. இதே பேச்சுத்தான் ஊரில். எனக்கு மொத்தம் எட்டு காணி நஞ்சையும் இந்த வீடும் சொந்தமாக இருக்கின்றது. இதை உங்கள் கண்ணகி இல்லத்திற்கு எழுதிவைத்து விடுகிறேன். நாங்கள் மூவரும் இல்லத்திற்கே வந்துவிடுகின்றோம். ஏதாவது தெரிந்த தொழிலையும் செய்கின்றோம். உங்களுக்குச் சம்மதமானால் சொல்லுங்கள்" என்றார்.

என்னால் எவ்வளவு துன்பம் என்று கலங்கினேன். அப்பாவின் துணிவைக் கண்டு வியந்தேன். இதைக் கேட்டு அம்மா திகைத்தாள். அந்த அம்மையார் என்ன சொல்லுகின்றார் என்றுஆவலுடன் காத்திருந்தேன்.

"நன்றாகச் சிந்தியுங்கள். அடுத்த வாரம் வரும்போது உறுதியாக இருந்தால் சொல்லுங்கள் செய்வோம், எனக்குத் தடை இல்லை. இல்லம் வளருவதற்கு அது உதவியாகவும் இருக்கும்" என்றார்.

அடுத்த வாரம் அந்த அம்மையார் வருவதற்குள் அம்மாவும் அப்பாவும் இதைப் பற்றியே இரண்டு முறை பேசினர்.

"இது என்ன முடிவு? இந்த ஊரைவிட்டு எப்படிப்போய்விடுவது?"

"ஏன் போனால் என்ன. உனக்கு என்ன வீட்டிற்குள் கிடப்பவள். வெளியில் போனால்தானே"

"அங்கே போய் எப்படி வாழ்வது என்றே கவலையாக இருக்கிறது"

"எல்லாம் நல்லபடி வாழலாம். அந்த அம்மா மிகவும் நல்லவர்கள் ஒரு குறையும் வராது. எனக்கும் முன்போல் வயல்களைச் சென்று பார்த்துவர முடியவில்லை. நாளைக்கு நமக்குப் பிறகு தங்கத்திற்கு ஒரு துணை வேண்டாமா? பேர்த்தியும் இரண்டு எழுத்து படித்தால் பிழைத்துக்கொள்ளுகின்றாள்." என்றார் அப்பா.

"அது என்ன பேர்த்தி என்று இப்போதே சொல்லிவிட்டீர்களே! பேரன்தான் பார்த்துக்கொண்டே இருங்கள்" என்று அம்மா சிரித்தபடியே தலை ஆட்டினார்கள்.

துன்பமெல்லாம் மறந்து அப்பாவும் அம்மாவும் இன்பமாக இருக்கும் அந்தக் காட்சியைக் கண்டுகளிக்க மனம் விரும்பியது என்றாலும், பேச்சு என்னைப் பற்றி மாறியதால் எழுந்து அடுத்த அறைக்குச் சென்றேன். அங்கிருந்தபடியும் அவர்கள் பேசுவதைத் தெளிவாகக் கேட்க இயன்றது.

"இல்லை பேர்த்திதான்"

"இல்லை இல்லை பேரன்தான்"

"பிறக்கட்டும் சொல்லுகின்றேன்" என்று சொல்லிவிட்டு மீண்டும் அப்பா அந்த "அம்மாவுக்கு நான் சொன்னது, சொன்னதுதானே?" என்றார்.

"சரி! நீங்கள் அவ்வளவு உறுதியாக இருந்தால் நான் ஏன் தடை சொல்லப் போகிறேன்" என அம்மா அப்பாவின் விருப்பத்திற்கு இணங்கி விட்டார்.

ஆறிக்கிடக்கும் நெருப்பை ஊதி விட்டது போல் ஆயிற்று அவர்கள் பேச்சு. எனக்கும் கணவர்க்கும் இருந்த உறவின் சின்னமாக என் உதிரத்து வளரும் அந்த மாணிக்கத்தைப்பற்றிக் கணவரும் நானும் கதை கதையாகப் பேசவேண்டும். போட்டி முடிவு வெளிப்படுவதைப்போல ஆவலுடன் எந்தப் பொருளின் வருகைக்காகக்காத்திருப்பது முறையோ அந்த இன்பத்தை நான் இழந்தேன். தாயும் தகப்பனும் தன்னைப் பற்றிப் பேசாது போயினும் பாட்டனும் பாட்டியுமாவது பிறக்காத அந்தப் பொன்னைப்பற்றிப் பேசுகிறார்களே என்ற ஆறுதல் தான் கொஞ்சம் மன நிம்மதியைத் தந்தது.

(தொடரும்)

விளக்கமளித்தார்?

தோரணங்கள் கட்டுகிறார்கள்! கொடிகளைப் பறக்கவிடுகிறார்கள்! குதூகலமாகப் பேசிக்கொள்கிறார்கள்!!

விழாக்கோலம் எழுகிறது! வீதிகளிலெல்லாம், சுத்தம் செய்கிறார்கள்!!

சீமாட்டிகளுக்குத் தேவையான அலங்காராதிகளைத் தேடி வாங்கித் தருவதிலே சீமான்கள் ஈடுபடுகிறார்கள்; சீமாட்டிகள், காலம் தமக்கு உண்டாக்கிவிட்ட கலன்களை மறைத்துக்கொள்ளும் பெரு முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.

அதிகாரிகள், மும்முரமாகிறார்கள்; போலீஸ் புது நடை போடுகிறது!

வருகிறார்!

நேரு பண்டிதர் வருகிறார்!

பஞ்சசீலக் கர்த்தா வருகிறார்!

பாருக்கெல்லாம் ஒரே நேரு! அவர் வருகிறார்! என்று பல பல பேசுகிறார்கள்.

பஞ்சடைந்த கண்களில் இதெல்லாம் மங்கலாகத் தெரிகிறது.

முடிசூடா மன்னர் வருகிறார்! பாரதத்தை வாழ்விக்கும் தலைவர் வருகிறார்! என்ற பேச்சு, அவன் செவியில் விழுகிறது.

அவன், கண்களிலே ஒரு நம்பிக்கை ஒளி கிளம்புகிறது!

நாடு கொண்டாடும் தலைவரல்லவா வருகிறார்—

பஞ்சம் ஓட்டினார்—பசியைப் போக்கினார், என்று கூறுகிறார்கள்—நானோர் ஏமாளி, இது நாள் வரையில், யாரிடம் சென்றால் என் குறை தீருமோ அவரிடம் செல்லாதிருந்தேன். நல்ல வேளை சாகவில்லை, பட்டினி என்னைப் பாதிப் பிணமாக்கிவிட்டிருக்கிறது—பரவாயில்லை — மூச்சு இருக்கிறதல்லவா, ஒரு முயற்சி செய்தே பார்த்துவிடுகிறேன்—என்று தீர்மானித்தான்.

அனில்தாஸ் என்ற அந்தப் பஞ்சை, கல்கத்தாவில், வேலையின்றி, பட்டினி கிடப்பவன். பசி காதை அடைத்தது — நேருபற்றிய புகழுரை, அந்தக் காதிலேயும் விழும் அளவுக்குப் பலமாக இருந்தது.

வயது 13.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில், அதிபர்களென நிலைபெற்றவர்கள், சாம்ராஜ்யாதிபதி எனும் நிலைபெற்ற நேருபண்டிதருடன் கூடிப்பேசினர்.

நமது ஆட்சியிலே நாம் சாதித்தவைபற்றிப் பெருமைப்படலாம்—ஐந்தாண்டுத்திட்டத்திலே வெற்றி கண்டோம் — அகதிப் பிரச்சினையிலே அமோக வெற்றி ஏற்பட்டது—உணவு நெருக்கடி ஒழிந்தே போயிற்று—பிரிட்டிஷ் ஆட்சியின் போது இருந்த பட்டினிக் கொடுமை இப்போது பாரதத்தில் இல்லை!—என்று பல 'ஜீக்'க்கள் பேசினர்—பண்டிட்ஜீ பரமானந்தமடைந்தார்.

அனில்தாஸ் பட்டினிக்கிடக்கிறான்—இரண்டு நாட்களாக அவனுக்குக் காங்கிரஸ் ஆட்சியிலே கிடைத்தது, காற்றும் தண்ணீரும்!!

பண்டித நேரு பேசினார் "நண்பர்களே! வெற்றி பல பெற்றோம்; உண்மைதான். ஆனால் இனி நாம் பெறவேண்டியவெற்றி ஒன்று உளது—என்றார்.

சமதர்மம்! சமதர்மம்! — என்று பஜித்தனர் பலரும்.

பண்டிதர் முகம் சுளித்துக் கொண்டார்! சமதர்மம், சமதர்மம் என்று பழைய முறையில் பேசிப் பயனில்லை. நாம் ஓர் புதுமுறையான, இதுநாள் வரையில் எங்கும் எவரும் காணாத சமதர்மம் காண வேண்டும்—என்றார்.

காண்போம்! காண்போம்! என்றனர் கனவான்கள்.

கமிட்டி கலைந்தது — கார்கள் கிளம்பின!

அதோ பண்டிட்ஜீயின் மோட்டார் என்றனர்.

விழிந்தடித்துக்கொண்டு ஓடினான் அனில்!

இரண்டு நாட்களாக, காற்றுத்தானே அவனுக்கு ஆகாரம் — பைத்யக்காரச் சிறுவன் — காற்றென ஓட முடியும் என்று எண்ணிக்கொண்டான்.

கார் பறந்தது; தூசி கிடைத்தது அனில்தாசுக்கு.

போலீஸ் அவனைப் பிடித்துக் கொண்டது.

யாரடா, பயலே!

அகதி, ஐயா!

அகதியா! என்ன விஷயம்!

பசி! காதை அடைக்கிறது! கண் இருண்டு கிடக்கிறது, வேலை இல்லை! இரண்டுநாளாகப் பட்டினி

அதற்காக அவர் மோட்டாரைத் துரத்துவதா?

அவ்ரிடம் என் குறையைக் கூற எண்ணினேன்!

மோட்டாரிலே சிக்கிக்கொண்டு செத்துத் தொலைக்காமலிருந்தான் அந்தப் பயல். யார் அவன்? வேறோரிடத்தில், பண்டிதர், தன பரிவாரத்தினரைக் கேட்டார்.

பிடித்திழுத்து வந்தார்கள்!

யார் நீ? என்ன வேண்டும்? பண்டிதர் கேட்டார்.

ஏழை! பசி! பட்டினி! அனில் கதறினான்.

பயலுக்குத் தின்பதற்கு ஏதேனும் கொடுத்து அனுப்புங்கள். என்று பண்டிதர் உத்தரவிட்டார்.

அனிலுக்கு அன்று உணவு கிடைத்தது!

மீண்டும் கல்கத்தா காற்று அவனுக்கு!

புதியதோர் சமதர்மம் காண்போம் என்று நமது பண்டிதர்கூறியதன் பொருள் இப்போது புரிகிறது என்றார், அவர் பரிவாரத்திலிருந்த ஒரு சீமான்,

புரியவில்லையே! என்றார் மற்றொருவர்.

மந்தபுத்தி ஐயா, உமக்கு! இன்று நேரு பண்டிதருடைய தயவால் இந்தப் பயலுக்கு வயிறார உணவு கிடைத்ததல்லவா? இந்த ஒரு சம்பவத்தைக் கேட்பவர்கள் இனி இந்தப் பயலைப் பார்க்கும்போதே, நேரு பண்டிதர் இந்தப் பயலுக்கு உணவு அளித்தார்! பயலுடைய யோக ஜாதகம்! பண்டிதரையேமயக்கிவிட்டான்! எல்லாம் முக பாக்கியம் என்று பலரும் பலவிதமாகப் பேசுவர், இவனுடன் சொந்தம் கொண்டாடுவர் இவனுக்கு உணவு அளித்து, தம்மைத்தாமே நேரு ஆக்கிக்கொள்வர்! அனில்தாசுக்கு இனி யோகம்தான்! என்றார் சமதர்மச் சீமான்.

அதுபோல...? என்று மந்தபுத்தியார் கேட்டார்.

அதுபோல யாராருக்கு நேருபண்டிதரின் தயவு கிடைக்கிறதோ, யாரார் மீது நேரு பண்டிதரின் பார்வைபடுகிறதோ, யாரார்மீது அவருக்கு அன்பு சுரக்கிறதோ அவர்களுக்கு, சுகம் கிடைக்கும்—என்று விளக்கினார் சீமான். அது எனக்கும்தான் தெரிகிறது, ஆனால் அது எப்படிச் சமதர்மம் ஆகும்? என்று கேட்டார் மற்றவர்,

இப்படித்தான் பழைய பாணியில் சமதர்மம் பேசுவோர் கேட்பர். அதனால்தான், நேருபண்டிதர், நான் ஓர்புதுவிதமான, இதுவரையில் பிறர் எவரும் காணாத சமதர்மம் கொண்டுவரப் போகிறேன், என்று கமிட்டியிலே எடுத்துரைத்தார் என்று கனவான் விளக்கமளித்தார்.

★

10-ம் பக்கத் தொடர்ச்சி

என்று எண்ணும்போதே எனக்குச் சிரிப்பு வருகிறது. இந்த அரிய வாய்ப்புக்காக நாம் அரும்பாடுபடும்போது, 150 ரூபாய்க்காக இதுகள் ஆலாய்ப் பறக்கின்றன, என்று நம்மவர்களிலேயே சிலர் கூறுவது கேட்கும்போது, நெடுந்தொலைவிலிருக்கிற இந்துஸ்தான் டைம்சுக்கும் புரிகிறதே, இவர்களுக்கு ஏனோ வயிறு எரிகிறது என்றெண்ணி ஆயாசமடைகிறேன்.

நாங்கள் எவ்வளவு அரும்பாடுபட்டு, சில வேளைகளில் கனிவு காட்டி மகிழச் செய்கிறோம், மற்றும் சில வேளைகளில் உருட்டுவிழி காட்டி மருளச் செய்கிறோம், எனினும் எல்லாம் எதன் பொருட்டு? நாம் ஒன்றாக வாழலாம், ஒரே நாடாக இருக்கலாம், ஓரரசுக்குள் இருந்திடலாம், தனித்தனி நாடுகள் தனித்தனி அரசுகள், வேண்டாம், கவி பாடியும் கதை கூறியும் நாங்கள் இதனைத்தானே எடுத்துக் கூறுகிறோம், ஒற்றுமைக்காக ஓயாது உழைக்கிறோம், ஏன் உமக்கு மட்டும் இந்த உயர்ந்த நோக்கம் ஏற்படவில்லை, எதனாலே உமக்குமட்டும், பேதபுத்தி, பிளவு மனப்பான்மை ஏற்படுகிறது, கங்கைக் கரைக்கும் காவிரிக் கரைக்கும் பேதம் ஏன் காணவேண்டும்? காசி காஞ்சி என்று ஏன் பிரித்துப் பிரித்துப் பேசுகிறீர்கள், எல்லாம் பாரதநாடு என்று பரிவுடன் எண்ணிடலாகாதா? என்று தலைவர்கள் பேசத்தான் செய்கிறார்கள்—கேட்கும்போது சிற்சில வேளைகளிலே எனக்குக்கூடத் தம்பி! நாம்தான் ஒருவேளை தவறாக நடந்துகொள்கிறோமோ, வீணான பேதபுத்தி நம்மைப் பிடித்தாட்டுகிறதோ, ஒற்றுமையின் மேன்மையை, ஓரரசின உன்னதத் தன்மையை, ஒரு பெரும் நாடு என்ற திட்டத்தின் அருமை பெருமையை அறிந்து போற்றிடும் அறிவற்றுப் போனோமோ, என்றெல்லாம் தோன்றச் செய்கிறது, எனினும் மறுகணம், நம் நாட்டின் இயல்பும அதற்கேற்ப வளர்ந்துள்ள வரலாறும், அதன் பயனாக நாம் பெற்ற பெருமைகளும் வந்து நிற்கின்றன, "ஏடா! மூடா! என்னை மறந்திட, துறந்திடத்தக்க நிலையிலா உன் மூதாதையர் காலமுதற்கொண்டு உன் காலம் வரையிலே நான் வாழ்ந்து வந்துகொண்டிருக்கிறேன்—இயற்கை எழிலும் வளமும் ஈந்த என்னை, உன் அன்னை என்று, ஏற்றுக்கொள்ளவுமா உனக்குக் கூச்சம் ஏற்படுகிறது! உனக்கென்று ஓர் தனி இயல்பும், தனிவாழ்வு முறையும், கிடைத்திட அல்லவா, பாலூட்டிச் சீராட்டி வளர்த்து வந்தேன்! புன்னகை பூத்து நிற்கும் பூவையரெல்லாம் தாய் ஆவரோ? அவரிடம் பகை கொள்ளச் சொல்கிறேன் இல்லை! அவர்கள் அன்புடன் உன்னை அழைத்திடும்போது, அருவருப்பு அடைந்து வெறுத்து ஒதுக்கிவிடு என்று பேசினேன் இல்லை! ஆயினும் கனிவு காட்டலாம் அம்மையே! எனினும் இதோ என் அன்னை! என்று பெருமையுடன் என்னைச் சுட்டிக்காட்டிடவா நீ தயக்கமடைய வேண்டும்! மதியற்றவனே! நேசம் வேறு, தாய்ப்பாசம் என்பது வேறு! கன்னல் மொழி பேசக்கூடும் மற்றவர். உன் தாய் சில வேளைகளிலே கடிந்துரைக்கக்கூடச் செய்வாள்—எனினும் 'தாய் அன்பு' என்பது தனியானதல்லவா—பிற எங்கும் பெறமுடியாததோர் பேரன்பு அல்லவா! பெற்ற மனம் கொண்டிடும் பாசத்தை வேறு எங்கு காண இயலும்! இதனையுமா கற்பிக்க வேண்டும்? கடுவனிடமும் கொல்லும் புலியிடமும்கூடக் காண்கிறோமே இதனை, கருத்தற்றவனே! உன்னிடம் அகமும் புறமும் அளித்து, அணி ஆரமும் மேகலையும் தந்து, அறநெறியும் பிற பெருமைகளையும் தந்து, அழகிய தாய் விழுமிய தாய் உன் வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளைத் தேடித் தேடித் தந்து, நீ ஏற்றம்பெற்று, கொற்றம் நடாத்தி, ஏறுநடை போட்டு எங்கணும் சென்று, என் வீரமும் அறிவும் எனக்கு என் அன்னை அளித்தாள்! என்று கூறி எனக்குப் பெருமை தேடித் தருவாய் என்று பார்த்தால், பெற்றவளை மறந்திடத் துணியும் பேதையே! கற்றதை மறந்திடும்கசடனே! என்னை மகனாக்கிக்கொள்ள ஒரு மகராசி, அழைக்கிறாள்— அவள் தன் வயிற்றில் பிறக்காதவர்களாயினும் வாஞ்

சனை காட்டுவதாக வாக்களிக்கிறாள்—உச்சி மோந்து முத்தமிட்டு, உன் தாயாக நான் இருக்கிறேன்! உனக்கும் உன்போலப் பல பிள்ளைகட்கும் நான் 'தாய் வேலை' பார்க்கும் பேராவல் சுரந்திடும் உள்ளம் கொண்டேன், எனவே உத்தமனே! உன் தாய் என்று அவளையும் இவளையும் காட்டி அழாதே! நான் தாயானேன், நீ என் மகனாய், என்று அழைக்கிறாள், நான் இனி அந்த அம்மைக்கு மகனாகிவிடுகிறேன், தாயே! விடைகொடு! என்று துணிந்து என்னைக் கேட்கிறாயே, பெற்ற வயிறு பற்றி எரிகிறதே! அந்த வேளையிலும், உன்னைப் பாவி! பழிகாரா! படுநாசமடைவாய்! என்று கூறவும் மனம் கூசுகிறதடா, பாலகனே! என்னைப் பார்! என் தாய்! என்று நீ கூறிப் பெருமைப்படத்தக்க நிலையில் நான் இல்லையா...என்னிடம் என்னடா மகனே! குற்றம் கண்டாய்? என்னை வெறுத்துவிட்டு வேறோர் வேற்றுச் சீமையாளிடம் 'தத்து' போகவேண்டிய நிலையா வந்துற்றது? நான் என்ன நீ பசியால் துடித்து, பதறிக் கதறிடும்போது உன் முகத்தையும் பார்த்திடாமல், என் சுகத்தைக் கவனித்துக் கொண்ட மாபாவியா? உன்னை மாடாய் உழைக்கச் செய்து, நான் உலவி மகிழ ஒரு மாடி கட்டிக் கொண்டேனா! உழைப்பால் நீ ஓடானாலும் பரவாயில்லை, எனக்கு ஓர் உல்லாச ஓடம் வேண்டும், அதனை நான் களிப்புக் கடலில் செலுத்தி மகிழப்போகிறேன் என்று செப்பிய வன்னெஞ்சக்காரியா! என்ன குறைகண்டாயடா மகனே! புதிய தாய் தேடவேண்டிய விபரீதம் நேரிட்டதா! மகனே! மகனே! மதி இழந்தனையோ! மயக்கமுற்றனையோ! பேதை மகனே! எதனையும் பெறலாம், அதற்கும் ஓர் வழி கிடைக்கும், ஆனால் அன்னையின் அன்பு என்பதனை, அறியாச் சிறுவனே! விலைபோட்டு வாங்க இயலுமா! அன்னையின் அன்பு, பெற்றவள் பாசம், மலிவு விலைக்குத் தருகிறோம், வருக! பெறுக! என்று யாரோ அங்காடியில் கூவிக்கூவி விற்பதாகக் கூறுகிறாயே! விளையாட்டுப்பருவத்தினன் நீ எனினும் கூடுகட்டி வாழும் குருவிகளைப் பார்க்கத் தெரியுமே உனக்கு — தாய்க் குருவியிடம்தானே குஞ்சுகள் தீனியைக் கேட்கின்றன — ஊட்டப்பெறுகின்றன! மடியிலே பாலைச்சுமந்து நிற்கும் பசு எதுவோ அதுவே நமக்குத் தாய் என்று ஊட்டிடச் செல்லும் கன்று, நீ பார்த்ததுண்டா! ஏடுகள் புகட்டுவதைக்கூடக்கவனிக்கவேண்டாம்; பக்குவம் வேண்டும் அதற்கு! கண்ணுள்ளோர் காணக்கூடிய காட்சிகளடா இவை — குருவிக்கூட்டிலே காணப்படும் குடும்ப பாசமும், துள்ளிடும் கன்றுக்குப் பாலும் அளித்து பரிவுடன் உடலை நாவினால் நீவியும் விடும் தாய்ப்பசுவின் பாசம்!! இந்தக் காட்சிகள் போதுமே, தாய் உள்ளத்தைத் தாயிடம்தான் பெறமுடியும் என்ற உண்மையை உணர்த்த!" என்றெல்லாம் தம்பி! தாயகம் கேட்கிறது! நான் காணுகின்ற வயலும் அதற்கு வளமூட்டும் நீர் நிலையங்களும், அந்த வளத்தை விளக்கக் குலுங்கிடும் மணியும் கனியும், அவைதமைப் பெற உழைப்பு நல்கிடும் உத்தமரின் வியர்வையும், குன்றும் குளமும், கூத்தும் பாட்டும், மக்களின் மாண்பும்பிறவும், எல்லாம் எனக்கு இதனைத்தான் காட்டுகின்றன! உனக்குமட்டுமென்ன, நீயும் இதே எண்ணம்தான் பெறுகிறாய்!

தம்பி! எனக்கும் உனக்கும் காமராஜருக்கும் என்று கூட வேண்டுமானால் சேர்த்துக் கொண்டே பேசுவோம், தேசிங்கு ராஜன் என்ற உடனே சுரக்கும் வீர உணர்ச்சி, வங்கத்திலும் கலிங்கத்திலும் ஏற்பட முடியுமா? பாக்தாதிலும் டமாஸ்கசிலும் எப்படி தேசிங்கு ராஜன் கதை கேட்டால், வியந்து பேசுவரோ, அவ்வளவுதான் கல்கத்தாவிலும் கான்பூரிலும்! கட்டப்பொம்மன் என்றதும் இங்கு தோள்பூரித்து, மாற்றானின் தாள் வணங்கமாட்டேன், என் கரத்தில் வாள் உண்டு! என்று ஆர்த்தெழத்தக்க வீரம் நமக்கு எழுவதுபோல, பிற எங்கு காண முடியும்? பாஞ்சாலங் குறிச்சியின் வீரக் காதையைக் கூறினால், பாஞ்சாலத்தில் உள்ளவர்கள் மனதிலே சொந்தம் எழாதே! வியப்பு தோன்றக்கூடும்! சுவைமிக்க வீரக் கதை கேட்டோம் என்ற மகிழ்ச்சி பிறக்கக் கூடும்! எனக்குத் தம்பி! சாதாரணமாக நெல் காணும்போது ஏற்படும் நம் பொருள் என்ற உணர்ச்சி கோதுமையைக் காணும்போது ஏற்படமாட்டேனென்கிறதே, என்ன செய்வேன்!

நம் நாடு—நம் இனம்—நம்நாட்டு இயல்பு — நமது வரலாறு — நம் நாட்டு வீரக் காதைகள்—நம்நாட்டு எழில்—நம்நாட்டு முறைகள்—என்பன, தம்பி! தாயிடம் சேய்கொள்ளும் பாசம் போன்றது, இயற்கையாகச் சுரப்பது, இந்தப் பாசம், பெற, தம்பி! எத்தனை எத்தனை தலைமுறைகளாயின என்று எண்ணிப்பார்! காவிரி குறித்தும், தமிழகத்து வீரக் காதைகள் குறித்தும், இந்நாட்டுக்குன்று குறித்தும் நம்மவர் கொண்டிடும் கொள்கை குறித்தும், எத்தனை எத்தனை தலைமுறைகளாகப் பேசிப் பேசிப் பேசி; அந்தப் பாசம் நிலைத்து நிற்கிறது!

சேரன் செங்குட்டுவன் காலமுதற்கொண்டு சொல்லிச் சொல்லிச் சுவை ஊறி ஊறி, நமக்கென்று ஓர் சுபாவம் அமைந்துவிட்டது—அதனை சுப்பிரமணியனார் பார்த்து சூ! மந்திரக் காளி! ஓடிப்போ! என்று சொல்லுவாராம் அந்த 'பாசம்' ஓடியே போகுமாமே! இந்தக் கேலிக் கூத்தை என்னவென்று சொல்வது!

நம் நடிகமணி டி. வி. நாராயணசாமி, 108-நாட்கள் சிவலீலா நாடகத்தில் சிவபெருமான் வேஷம் போட்டார் — பித்தளைப் பாம்புகள், கிரீடம்—ஏகப்பட்ட 'பாரம்—

அறிவிப்பு

பிரபல ஓவியர்களான பாலு பிரதர்ஸ், அய்க்கண், மாதவன்–கைத்திறன் கொண்டு தயாரித்த 'பொங்கல் வாழ்த்துகள்' விற்பனைக்கு தயார். மாதிரி வேண்டுவோர் (15-டிசையன்கள் கொண்ட செட்) ரூ. 1 M. O. செய்யவும்.

பகுத்தறிவுப் பண்ணை,
115, வண்டிகாரத்தெரு, :: தஞ்சை.

அந்தப் பழக்கத்தில், காலேவேளேகளிலேயே கூட, அந்த நாடகம் முடிந்து பல நாட்களுக்குப் பிறகும் நண்பர் நாராயணசாமி என்னிடம் வந்து பேசிக்கொண்டிருக்கையில், 'பாரம்' சுமந்து கொண்டிருக்கும் தோற்றமே இலேசாகத் தென்படும்! தம்பி, தாய்நாட்டுப் பாசம், நாராயணசாமி சுமந்தது போன்ற பாரம் அல்ல—அதுதான் தேசியம்— பாரம் பரியம் என்கிருர்களே அது. அதனே விலங்குகளும் அடியோடு இழந்துவிட முடியுமா என்பது ஐயப்பாடுதான் — நாம் எங்ஙனம் அதனே இழந்துவிடமுடியும் —அமைச்சர்கள், அதனே இழந்தால்தானே எமக்கு அமைச்சர் வேலே கிடைக்கிறது என்று வாதாடக் கூடும்—தம்பி! அது அவர்கள் கீழ்நிலே சென்றுவிட்டதைக் காட்டுவதாகுமே தவிர, நாட்டுப்பற்று எனும் மாண்பு பொருளற்றது என்பதையா காட்டிடும்!

தலேமுறை தலேமுறையாகவளர்ந்து நமது குருதியுடன் கலந்துள்ள தாய்நாட்டுப் பாசத்தை, ஒரு உத்தரவு பிறப்பித்து ஒழித்துவிட முடியும் என்று எண்ணுகிருர்களே, இவர்களே என்னென்று கூறுவது!

சின்ன வயதிலே சந்தைப்புறத்திலே காணுமற்போய்விட்ட குழந்தை, வேற்றூரிடம் வளர்ந்து, பெரியவனுனலும், பிறகோர் நாள், உண்மை தெரிந்ததும், தாயின் பாதத்தைத் தன் கண்ணீரால் கழுவிடக் காண்கிருேம் — கதைகளில்! தலேமுறை தலேமுறையாக தொல்காப்பியரும், வளளுவரும், இளங்கோவும் காக்கைப்பாடினியாரும், சீத்தலேச்சாத்தனரும் கோவூர் கிழாரும், கணியன் பூங்குன்றனரும் கபிலரும், திருத்தக்கரும், நக்கீரரும், நாகனரும், நச்சள்ளேயாரும், (மற்றவர் பற்றிய முறையான பெயர் வரிசையை நமது நாவலரிடம் கேட்டுப்பெறுக) ஊட்டி வளர்த்து, உருவாக்கி வைத்துள்ளதை ஊராளவந்தவர்கள் உத்தரவுபோட்டு உருக்குலேத்துவிடுவதாமே! இப்படியொரு 'உற்பாதம்' நேரிட விடலாகுமா!

எனவேதான் தம்பி, பாரத நாடு —இந்தியா — இந்தியர் — என்று இவர்கள் இட்டுக்கட்டி இதுகாலே திணிக்கவிரும்பும்போலித்தேசியம், முளேவிட மறுக்கிறது. நீண்ட நெடுங்காலமாக நமது பரம்பரைக்குக் கிடைத்து, கண்ணீரும் செந்நீரும் வியர்வையும் அதற்கு அளித்து செழிப்புறச் செய்து, எந்த இயல்பு—தாய்நாட்டுப்பற்று தேசியம்—நம்மிடம் குருதியிற் கலந்திருக்கிறதோ, அதனே அழித்திட முற்படுவது அறிவீனம் என்பது மட்டுமல்ல, ஆகாத காரியம், அடாதசெயல் என்பதுடன், இவர்கள் எக்காரணமபற்றியோ வெற்றி நிலே எய்திஞலும், இவர்கள் பிடியில் சிக்கிவிட்ட மக்கள், இருந்ததையும் இழந்து புதியதோர் இயல்பும் பெருமல் ஏதுமற்றவர்களாக, பட்டியில் மாடென உழல வேண்டிநேரிடுமேயன்றி எமது! எம்மவர்!எமது இயல்பு!எம்வீரர்!எமது புலவர்! எமது நெறி! என்று கூறிப் பெருமைப்பட, அறிவாற்றல்பெற முடியாததோர் நிலே பெறுவர்! நாடு இருக்கும், அதிலே மக்கள் இருப்பர்—ஆனல் இரண்டினேயும் ஒன்று ஆக்கிடும் பாசம்—பற்று— தேசியம்—இருக்காது!! வீட்டிலே இருக்கும்போது, நம்முடன் இருப்போரைவிட, அதிகமான அளவில் தான் ஆட்கள் இருக்கிருர்கள் இரயில் பயணத்தில் வீட்டிலே காணப்படுவதைவிட சிற்சில வேளேகளிலே இரயிலில் குதூகலமும்கூடக் காணப்படும்—எனினும் அதிலே செல்லும் எவரும்—இரயிலேத் தமது வீடு என்று கொள்வதில்லேயே!! சிறு குடில் எனினும் அதனிடம் ஏற்படும் பாசஉணர்ச்சி புது மெருகுடன் கூடியதாக இருப்பினும், இரயிலிடம் ஏற்படுகிறதா!! புதிய போதகர்களோ, குடிலேயும் அழித்துவிடுங்கள், நாங்கள் அமைத்திருக்கும் கூடாரத்தை உமது மனேயென்று கொள்ளுங்கள் என்கின்றனர்! முடியாது ஐயன்மீர்! ஏனெனில் அது முடியக்கூடிய செயலல்ல என்கிருேம். விடாதே! பிடி! சிறையில் அடை! என்று இந்துஸ்தான் டைம்ஸ் கொக்கரிக்கிறது!!

இதிலிருந்து தம்பி, நான் துவக்கத்தில் எடுத்துக்காட்டியபடி, அங்கு வரையில், நமது கழகம் மணம்பரப்பிவிட்டிருக்கிறது என்ற பேருண்மை தெரிகிறது.

இதுபோல, எங்கும் நமது கழக நிலே தெரிந்திடவேண்டும் என்பதற்காகவேதான் தம்பி, நானும் துணிந்து ஆங்கிலக்கிழமை இதழ், ஜனவரித் திங்களிலிருந்து வெளியிடுவது என்று ஏற்பாடுகளேத் துவக்கிவிட்டேன். சென்றஆண்டு, எப்படியும் இந்த இதழ் துவக்கி நடத்துவது என்று, ஏற்பாடுகளே என் நண்பர் S. S. P. லிங்கம் அவர்களேக்கொண்டு துவக்கினேன். அவரும் மிக ஆர்வத்துடன் டணியாற்றினர்—ஆனல் என் சுபாவம் தான் உனக்குத் தெரியுமே, புதிய பொறுப்பாயிற்றே! எப்படி இதனேயும் கவனித்துக்கொள்வது! என்ற அச்சம் குடைந்தது. மெத்தச் சமாதானம் சொல்லி, நண்பர் லிங்கத்தை, இப்போதைக்கு வேண்டாம், பிறகு பார்ப்போம் என்று கூறினேன். இப்போது சென்னேயிலிருந்து நடத்துவதை விட காஞ்சியிலிருந்து வெளியிடுவது, சிறிதளவு வசதி தரும் என்ற எண்ணத்துடன், ஏற்பாடுகள் செய்துவருகிறேன். தம்பி! நான் அதற்காகக் கேட்கும் ஆதரவு— நன்கொடை அல்ல—துவக்கத்திலேயே எனக்குத் தெம்பும் தைரியமும் வருவதற்காக, ஆயிரம் சந்தா தேவை என்று கேட்டேன்.

நான் இதுபோலக் கேட்கும் போது, தம்பி, நீ மட்டுமல்ல கேட்டுக் கொண்டிருப்பது.

மாற்றுக் கட்சியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்; சர்க்காரும் உற்றுக் கேட்கிறது.

என் வேண்டுகோளேத் தம்பி, நீ அன்புடனும் அக்கரையுடனும் நிறைவேற்றி வைத்தால், உனக்கும் எனக்கும் உள்ள உறவு எவ்வளவு உயர்தரமானது என்பதை அறிவதுடன், நமது கழகத்துக்கு எத்துணேசெல்வாக்குஇருக்கிறது, காரியத்தை வெற்றிகரமாக்கும் ஆற்றல் நமது கழகத் தோழர்களிடம் எவ்வளவு இருக்கிறது என்பதை, மாற்றுக்கட்சியினரும், சர்க்காரும் அறிவர்!

உன் அன்பும் அக்கரையும், ஆங்கில ஏடு பொறுத்தவரையில், நான் மகிழத்தக்க வகையில் இன்னும் உருவெடுக்கவில்லே என்பதைக் கூறிக்கொள்ள வருந்து

கிறேன். எனினும் சொல்லிவைக்கிறேன்; நிலைமையை அறிந்து விரைவினில் ஆதரவு திரட்டி அளித்திடும் ஆற்றல் உன்னிடம் நிரம்ப இருக்கிறது என்று அறிந்தவன் என்பதனால்.

இந்துஸ்தான் டைம்ஸ் போன்ற பல, வளமான ஆங்கில ஏடுகளை மட்டுமே வெளி உலகு காண்கிறது-எனவே திராவிடம் தெரிவதில்லை.

டாக்டர். மு. வ. கூறுவதுபோல, சென்னை அமைச்சர்களையோ அச்சம் தடுக்கிறது; எப்போதேனும் அவர்கள் துணிந்து நீதி வழங்கும்படி கேட்டாலோ, மிரட்டலும் விரட்டலுமே கிடைக்கிறது, பல்கலைக் கழகத்தினரின் நியாயமான கோரிக்கையையும் டில்லி புறக்கணித்து விடுகிறது, மதிப்பளிக்க மறுக்கிறது, இப்படி ஒவ்வோர் முனையிலிருந்தும் டில்லியின் தாக்குதல் கிளம்புவது கண்டு, மனம் நொந்துபோயுள்ள நம்மையோ நாட்டிலே நடமாடவிடுவதே கூடாது, ஒழித்துக்கட்ட வேண்டும் என்று டில்லியிலுள்ள இந்துஸ்தான் டைம்ஸ் கூறுகிறது. இந்நிலையில், நமது கழகத்தைப் பிறர் அறிவதற்காகவாவது ஒரு ஆங்கில ஏடு—கிழமை இதழாவது வேண்டும் அல்லவா!

இதை அறிந்துள்ள உனக்கு ஆதரவு திரட்டி உடனே அனுப்பி வைக்கும்படி, தம்பி, நான் பன்னிப் பன்னிக் கூறத் தேவையில்லை என்று எண்ணுகிறேன்.

கலை, கல்வி, அரசியல், எனும் மூன்று துறைகளிலே, டில்லி வழங்கியுள்ள மிரட்டல் விரட்டல் கண்டோம்—இனித் தம்பி, தொழில் துறையிலிருந்து கிளம்பும் ஒரு துயரக் கீதம், கேள். அதைக் கூறு முன்பு, நமது நிதி அமைச்சர் உருவத்தையும் உரையையும் நினைவிலே கொண்டுவந்து நிறுத்திக் கொள்ள வேண்டுகிறேன்!! அடுத்த, கிழமை அந்தத் துயர கீதம் பற்றிக் கூறுகிறேன்.

அன்பன்,



6-ம் பக்கத் தொடர்ச்சி

மேற்கு சீனாவின் பெரும்பகுதி மக்கள் பௌத்தர்களாயினர். அதற்குப் பின் காஞ்சிபுரத்திலிருந்து சீனாவிற்குச் சென்ற போதி தர்மா என்ற பௌத்தர் சீனர்களின் விருப்பத்திற்கும் தேவைகளுக்கும் ஏற்ற முறையில் ஒரு புதிய பௌத்த சங்கத்தை ஏற்படுத்தினார். இதற்குத் தியானா என்று பெயர். சீன மொழியில் சன் என மருவி வழங்குகிறது. இந்த 'சன்' என்ற பௌத்த மதத்தைப் பெரும்பாலான சீன மக்கள் பின்பற்றினார்கள்.

சீனாவில் முதன் முதலில் பௌத்த மதம் அரசாங்கத்தினரின் தாக்குதலுக்குஇலக்காயிற்று. மன்னர்கள் பௌத்த மதத்தை ஒறுத்தார்கள். தத்துத ஞானிகள் பௌத்த மதத்தில் புதைந்துள்ள மூடக் கொள்கைகளைப் பற்றிப் புகார் செய்தார்கள். சீனாவின் ஒப்பற்ற புதல்வர்கள் பௌத்த மதத்தைச் சார்ந்து துறவறத்தை மேற்கொள்வதால், சீனாவின் ஜீவரத்தம் மலடாகிப் பாழ்படுகிறது என்று பதறினார்கள் இராஜ தந்திரிகள். இந்தச் சூழ்நிலையில் பௌத்த மதத்தின் வளர்ச்சி மன்னன் கன்பூசிய மதத்தைச் சார்ந்தவனா அல்லது பௌத்த மதத்தைச் சார்ந்தவனா என்பதைப் பொறுத்திருந்தது. முடிவில் அரசாங்கத்தை மதம் வென்றது. மன்னர்கள் புதிய கடவுள்களிடம் சமாதானம் செய்து கொண்டார்கள். கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 18-ம் நூற்றாண்டு வரை பௌத்த மதம் சீனாவில் உச்ச நிலையில் இருந்தது. பாஹியான், ஹியூவன் சாங், இட்சிங் போன்ற தத்துவ ஞானிகள் இந்தியாவிற்கு வந்து ஏராளமான பௌத்த நூல்களை எடுத்துச் சென்று சீன மொழியில் மொழி பெயர்த்தார்கள். சீனாவிலுள்ள பௌத்த பிக்குகள் பௌத்த நூல்களை முதல் முதலில் அச்சிட்டு வெளியிட்டார்கள். இந்தியாவிலிருந்து சீனாவிற்குச் சென்ற பௌத்த பிக்குகள் தங்களுடன் விஞ்ஞானத்தையும் மருத்துவக் கலையையும் எடுத்துச் சென்றார்கள். இவ்வாறு பௌத்த மதம் சீனாவில் கட்டிடக் கலை, இலக்கியம், சித்திரம், சிற்பம் ஆகிய கலைகளை வளர்த்துச் சீன மக்களின் பண்பாட்டைப் பெரிதும் உயர்த்தியது.

கி. பி. 18-ம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து பௌத்த மதம் சீனாவில் மறையத் தொடங்கியது.

ஜப்பான்:

பௌத்த மதம் சீனாவிலிருந்து கொரியாவிற்குப் பரவி, பின் கொரியாவிருந்து கி. பி. 552-ல் ஜப்பானுக்குப் பரவியது. ஜப்பானிய இளவரசர் ஷோடோகு பௌத்த மதத்தைத் தழுவியதோடன்றி அம்மதம் ஜப்பானில் பரவுவதற்குப் பல துறைகளிலும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டார். அவரே பல பௌத்த நூல்களுக்கு விளக்கங்கள் எழுதியிருக்கிறார். நாரா, கொர்யூஜி போன்ற நகரங்களைக்கட்டி அங்கே பௌத்தத் துறவிகளைக் குடியேறச் செய்தார். காலத்தால் அழியாமல் கட்டிடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டாக இன்று ஜப்பானில் விளங்குகின்ற பல பௌத்தக் கோவில்களை அவர் கட்டுவித்தார். வெண்கலத்தாலும், மரத்தாலும் ஆன பல கலைத்திறன் மிக்க புத்த சிலைகள், அவர் காலத்தில் செய்யப்பட்டன. அஜந்தா சித்திரங்களுடன் ஒப்பிடும் வகையில் பல அழகுமிகு பௌத்த சித்திரங்கள் ஹொர்யூஜியில் வரையப்பட்டன.

ஆசிய நாடுகளில் ஹீனயான பௌத்த மதம் இலங்கை, பர்மா, சயாம், கம்போடியா ஆகிய நாடுகளிலும், மகாயான பௌத்தமதம் திபெத்து, பூட்டான், சிக்கியம், நேப்பாளம், மங்கோலியா, சீனா, கொரியா, ஜப்பான், ஜாவா, சுமத்ரா அகிய நாடுகளிலும் பரவி இருக்கின்றன. பௌத்த மதம் இந்தியாவில் தோன்றிய போதிலும், பௌத்த கோவில்களில் மிகப் பெரிய கோவில் ஜாவாவில்தான் இருக்கிறது. போரோபுதூர் என்ற இக்கோவிலில் 436 கலைத்திறன் மிக்க புத்த சிலைகளைச் செதுக்கிய பின்பும் மன நிறைவு பெறாமல், கோவிலின் சுவர்களில் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை மூன்று மைல் நீளத்திற்குச் செதுக்கி இருக்கிறார்கள். கல்லில் செதுக்கிய காவியமாக இக்கோவில் இன்றும் காட்சியளிக்கிறது.

—"கலைக்கதிர்'

தேவையற்ற டயானா

"ஏன் அந்தக்கோயிலைக்கொளுத்தினேன் என்று கேட்கின்றீர்கள்? சொல்லுகின்றேன்; என் பெயர் அழியாமல் நீண்ட நாட்களுக்கு மக்கள் மனதில் நிலைக்கவேண்டும் அதற்காகத்தான்" என்று கூறினான், ஆசியா மைனர் பகுதியில் இருந்த 'டயானா' தேவதையின் கோயிலுக்குத் தீ மூட்டிய வாலிபன்.

'டயானா' இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஆசியாமைனர் பகுதியினருக்கு தேவதை. ஓடுகின்ற செயல் இவள் அதிகாரத்திற்கு உட்பட்டதுதானாம். அவன் கோயிலைத் தீக்கிரையாக்கினான்.

"விட்டுவிடுவோமோ?" என்று கிளம்பினர் வைதீகப் போக்கினர். கொளுத்திவிட்ட கோயிலுக்குத் திருப்பணிகள் தொடங்கினர். மாவீரன் அலெக்சாண்டர் போர்த்திறத்தால் உலகெல்லாம் நடுங்கச் செய்தவன்தான். வரலாற்று ஏடுகளில் தன் பெயர் வீரத்துடன் இணைத்து எழுதப்படுவதுடன் மட்டும் அமையாமல் வேறு இடங்களிலும் பொறிக்கப்பட வேண்டும் என்று எண்ணினான்.

"இடிந்த கோயிலைச் செப்பம் செய்து தருகின்றேன். கோயிலின் முன் இடத்தில் என் பெயர் பொறிக்க ஒப்புக்கொள்ளுங்கள்" என்று கேட்டானாம். முடியாது என்று கூறிவிட்டனர். அங்கும் இங்குமாகக் கொஞ்சம் கொஞ்சமாகப் பொருளும் பொன்னும் சேர்த்தனர், கருகிய கோயிலுக்கு உருவம் தந்தனர். சுதையும் சுண்ணமும் சாலாது என்று பொன்னையும் சில இடங்களில் வைத்து இழைத்து மெருகு காட்டினர். 220 ஆண்டுகள் ஆயினவாம் அதைக் கட்டி முடிக்க. 425 அடி நீளமும் 220 அடி அகலமும் கொண்டது அந்தக் கோயில் என்று பிளனி எனும் வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

ரோம் நகரம் தீப்பற்றி எரிந்தபோது பிடில் ஒலித்து மகிழ்ந்தான் என்று சொல்லப்படும் நீரோ மன்னனுக்குப் பொருள் நெருக்கடி வந்தபோதெல்லாம் அந்தக் கோயிலை நாடி அங்கு இருந்த பொன்னையும் மணியையும் பொருளாக்கிக்கொண்டானாம்.

பெருமைப்பையும் பெரும் பொருளையும் கொள்ளைகொண்ட அந்தக் கோயில் கி. பி. 268-ஆம் ஆண்டில் மீண்டும் தீக்கிரையாகிச் சாமபராய்ப்போய் அழிந்தது.

127 தூண்கள் — வேலைப்பாடு மிக்கன, கவின்தரு பொருள்களாக இருந்தன — மன்னர்களின் பரிசுகளாக வந்தவை—அவை எல்லாம் பிறகு வேறு இடத்தில் வேறு ஒரு கோயில் கட்டப் பயன்பட்டனவாம்.

ஒரு காலத்தில் மக்கள் மதம் எனும் இருட்டறையில் கிடந்து உழந்தபோது மதிப்பான செல்வாக்கைப் பெற்று இருந்த அந்த இடம் அழிவுக்குப்பின் சிதைந்த சுவர்களும், சிதறிய பகுதிகளும், இற்றுப்போன தூண்களுமாக கேட்பார் அற்றுக் கிடக்கின்றன.

தேவை இல்லை என்றதும் 'டயானா' மாஜி ஆனதுபோல் இங்கும் மாஜி ஆக்கப்பட வேண்டிய தேவையற்ற தேவதைகள் எவ்வளவோ இருக்கின்றன.

★

நேருவுக்குப் பிறகு!

நாம் பலகாலமாகவே சொல்லிவரும் ஒரு உண்மையை இப்போது டில்லியின் பண அமைச்சர் டி. டி. கே. அவர்கள் சொல்லுகிறார்.

நேருவுக்குப் பிறகு காங்கிரசைக் கட்டிக்காக்க யாரும் இல்லை; நேரு காலத்தோடு காங்கிரசின் காலமும் காலாவதியாகிவிடும். வாரிசாக வரக்கூடியவர்கள் காங்கிரசில் இல்லை என்பது நாடும் விஷயமறிந்த பலரும் தெரிந்திருக்கும் ஒரு உண்மையாகும். இதனை இப்போது டி. டி. கே. அவர்கள் வேறு கோணத்தில் நின்று கூறுகிறார். காங்கிரசை எதிர்ப்பவர்கள் நேருவை ஆதரிக்கிறார்கள் என்று தொடங்கி, காங்கிரஸ் வேறு நேரு வேறு என்று கருதவேண்டாம், நேரு இல்லையேல் காங்கிரஸ் இல்லை, நேருவும் காங்கிரசும் உடலும் உயிரும் போன்றது, எனவே நாம் (டி. டி. கே. போன்றவர்கள்) நேருவின் கையாட்கள்தான் என்று கூறிக், காங்கிரசின் ஆயுட்காலத்தை வரையறுத்துள்ளார்.

உயிரற்ற உடல் எந்த நிலையை அடையுமோ அந்த நிலையைத்தான் நேரு காலத்துக்குப்பிறகு இருக்கும் காங்கிரசும் அடையும் எனபதைச் சொல்லாமல் சொல்லுகிறார்.

காந்தியார் தம்முடைய வாரிசாகப் பண்டித நேருவைத் தயாரித்தார்; ஆனால் பண்டித நேருவின் தயாரிப்பெல்லாம் ஷேக் அப்துல்லாக்களாகவன்றோ ஆகின்றன. எனவேதான் காங்கிரஸ், நேரு காலத்தோடு சரி என்று நாம் கூறிவருகிறோம்.

முகப்பில்........

ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோன், புலி வேஷம் போடுகின்ருன்! பொது மக்கட்குப் புல்லளவு மதிப்பேனும் தருகின்ருனு? என்று கேட்டார் கவிஞர். அதே கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கும் மாபெரும் பூபாகத்தின் படத்தையே, இந்த வார, இதழின் முகப்பில் தீட்டியுள்ளார் நமது ஓவியர் பழனி.

இருட் கண்டம் என்று இன்னும் அழைக்கப்படும் ஆபிரிகாவிலுள்ள பல இடங்கள் காலனி ஆதிக்கத்தை எதிர்த்து நின்று வெற்றி பெற்றும், வெற்றி பெறப் போராடிக்கொண்டும் உள்ளன! எவ்வண்ணமோ, இந்தக் கண்டத்துக்குள், 'ஐரோப்பாவே புகுந்துகொண்டது போல' ஐரோப்பிய நாடுகள் பல புகுந்து கொத்தடிமை கொண்டன. பிரான்ஸ்! பிரிட்டன்! பெல்ஜியம்! டச்சு! ஸ்பெயின்! — இவ்விதம் பல நாடுகளுக்கும் இங்கே, இடமுண்டு. இந்த அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்து அண்மையில் விடுதலை பெற்ற மொராக்கோவையும் டுனீஷியாவையும் அறிவீர்கள். சென்ற கிழமை, இவை, ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராயும் ஆகியுள்ளன. அல்ஜீரியா, பிரெஞ்சுப் பிடியினின்றும் விடுதலை பெற, அனுதினமும் தனது வீரர்களைத் தத்தம் செய்துகொண்டுள்ளது பிரெஞ்சு பீரங்கிகளுக்கு! எகிப்தும், சூடானும் ஆங்கிலேயர் பீடியில் சிக்குண்டு கிடந்த இடங்களாகும். பரூக் எனும் மாமன்னனை வெளியேற்றிவிட்டு குடியரசான எகிப்தும் சூடானும் இப்போது தனித்தனி நாடுகளாக இருக்கின்றன! எகிப்து, இன்று உலகையே கலக்குகிறது, தேசிய எழுச்சிபெற்று.

ஆபிரிகாவிலுள்ள ஒவ்வொரு நாடும் விடுதலைபுரியை நோக்கி ஒவ்வொருவகையில் முன்னேறிக் கொண்டுள்ளன! கென்யா போன்ற இடங்களில் வெள்ளை ஆதிக்கத்தை எதிர்த்து 'மாவ்—மாவ்' இயக்கத்தினர் செய்துவரும் அட்டகாசங்களை அறிவோம், நாம். படத்தை இப்போது ஒருமுறை பாருங்கள்! வெள்ளையாக இருக்கும் பாகங்கள் யாவும் இன்னும் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருப்பவையாகும். இந்த ஆண்டு ஜூலை திங்கள் வரையிலுள்ள விபரப்படி, தீட்டப்பட்டதாகும் இப்படம். அண்மையில் பெஞ்சுலாண்டுக்குக் கூட சுதந்திரம் தருவதாக முன்வந்திருக்கிறது பிரிட்டன்! இந்தப் பிரதேசம்தான், ருத்வில்லியம்ஸ் என்கிற வெள்ளை மாதை மணந்ததால் மணிமுடியை துறக்க நேர்ந்த செரட்சிகாமாவின் இருப்பிடமாகும்.

படத்தை மீண்டும் ஒரு முறை பாருங்கள்! ஓவியர், ஆபிரிகாவில் வாழும் மக்கள் தொகையினைக் குறிப்பிட மூன்று உருவங்களைத் தீட்டியுள்ளார். எவ்வளவு பெரிது நீக்ரோவின் உருவம்! அதோடு ஒப்பிட்டால் எத்துணை சிறியது வெள்ளையரின் உருவம்! இவ்வளவு கொஞ்சமாக—50-லட்சம் வெள்ளையர்! 14-கோடி கருப்பர்!! — இருப்போர்தான், பெரும்பான்மையான நீக்ரோக்களை நாயினும் கேடாய் நடத்திட சட்டங்கள் செய்து கொட்டமடித்து வருகின்றனர். ஆபிரிகாவில் வாழும் ஆதிக் குடிகளுக்கு மட்டுமல்ல, அங்குள்ள பல இடங்களில் பிழைப்பதற்காகச் சென்றிருக்கும் தமிழர்கள் போன்ருருக்கும் இதே கதிதான். இந்த வகையில் கொடுங்கோல் புரியாக இருப்பது, தென் ஆபிரிகா யூனியனுரும். சென்ற கிழமை அங்கே ஒரு விந்தைக்குரிய நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. ஹாலிவுட்டில் தயாரிக்கப் பெற்ற "மன்னனும் நானும்" என்கிற சினிமாப்பட விளம்பரத்தைச் சுவர்களில் ஒட்டியிருந்தார்கள். டெபோரா கெர் எனும் பிரசித்தி பெற்ற அமெரிக்க நடிகை அழகான சயாம்நாட்டு வாலிபனின் கரத்தில் கட்டுண்டு கிடப்பதாக அச்சிடப்பட்டிருந்தது. எப்படி ஒரு வெள்ளைமாது, ஐரோப்பியனல்லாத ஒருவனைத் தழுவுவதாகப் படம் ஒட்டலாம்? கூடாது—என்று சொல்லி, சர்க்கார் உத்தரவிட்டு, அந்த சயாம் வாலிபன் உருமுழுதும் சர்க்காரால் கரிபூசப்பட்டு காட்சி அளிக்கிறதாம்.

கிடத்தட்ட 44 நிர்வாக 'யூனிட்டு'களைக் கொண்ட ஆபிரிகாவில், வெள்ளையர்கள் குடியேறி தங்களுடைய இடமாக அமைத்து ஆட்சி நடத்துகிற இடம் தென் ஆபிரிக்க யூனியன் ஒன்றுதான். இதனை ஆளுவோர் அனைவரும் வெள்ளையரே! ஸ்டைர்டம் எனும் முதலமைச்சர், "வெள்ளையரே உயர்ந்தவர்—கருப்பர் தாழ்ந்தவர்கள்" என்று நிலைநாட்ட நடத்தி வரும் அக்கிரமங்களை அடிக்கடி நமது ஏட்டில் நீங்கள் படித்திருக்கக்கூடும். கிட்டத்தட்ட ஒன்றேகால் கோடி கருப்பர்கள் உள்ளனர் இந்த யூனியனில் மட்டும்! இவர்களை ஆளும் வெள்ளையரோ முப்பது லட்சம்தான்!

கருப்பருக்கு உயர்ந்த உத்யோகம் கிடையாது-அவர்கட்கென்று சொந்த வீடோ, நிலமோ வைத்துக்கொள்ளக்கூடாது-அவர்களுக்கு ஓட்டுரிமையும் கிடையாது. 248 பேர் உறுப்பினராயிருக்கும் தெ. ஆ. பார்லிமெண்டில் கருப்பர்கள் சார்பாக ஏழு வெள்ளைப் பிரதிநிதிகளிருக்கிருர்கள்! அவர் மூலம் தான், கருப்பர்கள் தமது குரலை ஒலிக்க முடியும். இதுவும், வெறும் கண்துடைப்பு வேலை. புலியா பசுவுக்குப் பிரதிநிதி?

அனுமதிச் சீட்டு இன்றி கருப்பர் எவரும் வெள்ளையர் வாழ் இடங்களுக்குச் செல்ல முடியாது—கருப்பர்களுக்கு படிப்பும் சொல்லித்தரப்பட மாட்டாது-ஸ்டைர்டம் இதற்காகவே, அங்கு ஒரு சட்டம் செய்துள்ளான். அதனல் கருப்பர்கள், கண்ணிருந்தும் குருடராய், இரகசியப் பள்ளிகளும் நாடகக் கொட்டகைகளும் வைத்து நடத்திக்கொண்டு பூச்சி புழுக்களைப்போல வாழ்கின்றனர்! எவ்வண்ணம் இந்து மதத்தில் இழி சாதியினர் என்போர் பிரம்மாவின் காலடியில் பிறந்தோர்—அவர்கள் அப்படித்தான் வாழவேண்டும் என்று ஆர்யமதக் கோட்பாட்டினர் இன்றும் வாதாடுகிருர்களோ, அதுபோலவே ஸ்டைர்டமும் "கருப்பர்கள், கடவுளால் படைக்கப்பட்ட கீழ் சாதியினர். அவர்கள் வெள்ளையருக்கு அடங்கியே நடக்கவேண்டும்", என்று கூறுகிருன்.

நேருவும் பிறரும் கூட்டும் "ஆசிய—ஆபிரிக மாநாடு"கள் இந்தக் குறைகளுக்கெல்லாம் பரிகாரம் தேடவும், ஐரோப்பியரின் விளையாட்டுத் தோட்டமாகக் கிடக்கும் ஆபிரிக்காவை மீட்கவும் முயன்ருல் நல்லதாகயிருக்கும். நேருதான், ஆதிக்கம் செலுத்த நினைக்கும் ஈடனும், அக்கிரமங்கள் புரிந்துகொண்டே வாழும் தென்ஆபிரிக்காவும் அங்கம்வகிக்கும் 'காமன் வெல்த்' அமைப்பைக் கைகழுவவும் தயங்குகிருரே!

★